

எழுமாத்தூர் பொன்காளி அம்மன்

# எழுமாத்தூர்
# பனங்காடர்குல வரலாறு

புலவர் செ. இராசு, எம்.ஏ.
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-5

வெளியீடு :
பனங்காடர்குல நற்பணி மன்றம்
எழுமாத்தூர் - 638 217
பெரியார் மாவட்டம்

முதல் பதிப்பு : ஏப்ரல் 1994
14-4-1994 பவ ஆண்டு சித்திரை முதல் நாள்

விலை : ரூ. 20-00

நூல் கிடைக்குமிடம் :

கே. முத்துக்கிருஷ்ணன்
அம்மன் ஏஜன்சீஸ்,
2. கச்சேரி வீதி,
(பன்னீர்செல்வம் பூங்கா அருகில்)
ஈரோடு 638001 (போன் 213576)

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை - 600 014.

# ஆசிரியர் உரை

தமிழகத்திலேயே நமது கொங்குநாட்டில்தான் ஆலயத் திருப்பணிகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. ஆலயப் பணிபுரியும் கொங்கு வேளாளர்களிடையே தங்கள் நாடு, ஊர், கோயில், குலம், காணி பற்றிய பண்டைய செய்திகளைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிகப்பெருகி வருகிறது. அதன் விளைவே 'எழுமாத்தூர் பனங்காடர்குல வரலாறு' என்னும் இந் நூலாகும்.

என் தமிழாசான் ஞானகுரு அமரர் பெரும்புலவர் எழுமாத்தூர் வேலம்பாளையம் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள் தொடர்பு ஏற்பட்ட 1953 ஆம் ஆண்டி லிருந்து எழுமாத்தூருடன் எனக்குத் தொடர்பு உண்டு.

எழுமாத்தூர் புகழ்மிக்க பூந்துறை நாட்டின் நான்கு தலை நகரங்களில் ஒன்று. மேல்கரைப் பூந்துறை நாட்டின் 32 ஊர் களில் நான்காவதாகத் திகழும் பெருமை உடையது. பழம் பெரும் வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் புகழும் உடையது.

சிறப்புமிகு எழுமாத்தூர்க் காணியாளர்களில் ஒருவராகச் சீர்மிகக் கொண்டு விளங்குபவர்கள் பனங்காடர் குலத்தினர். இந்நூலில் பனங்காடர் குலத்தின் தொன்மை வரலாற்றுப் பெருமைகளுடன் எழுமாத்தூர்ச் சிறப்புக்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

பனங்காடர் குலத்தார் பக்தியில் சிறந்தவர்கள். பற்பல ஆலயத் திருப்பணிகளை ஆர்வமுடன் செய்பவர்கள். கல்வி வளர்ச்சியில் கருத்துக் கொண்டவர்கள். ஊர்ப்பொது நன்மைக் காக அயராது ஒற்றுமையுடன் உழைப்பவர்கள். பூந்துறை

நாட்டுச் சபையில் அங்கம் பெற்றுப் பல்வேறு அறப்பணிகளை நடத்தியவர்கள். பூந்துறை நாட்டைக் கடந்தும் கொங்கின் பல பகுதிகட்கும் சென்று கோவேந்தர் மெச்சக் குடிபுரந்த வர்கள்.

கல்வெட்டு, ஓலைச்சுவடி, செப்பேடு, பட்டயம், தனிப் பாடல், காணிப் பாடல்கள், இலக்கியம் ஆகியவற்றிலிருந்து இவ் வரலாற்று நூலைத் தொகுப்பதிலும், வெளியிடுவதிலும் பல்வேறு உதவிகளைச் செய்த எழுமாத்தூர்ப் பனங்காடை குலக் காணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக. 20-3-1994 அன்று எழுமாத்தூர்க் கோயில்கள் அனைத்தையும் ஒரே நாளில் தரிசிக்கும் வாய்ப்பை அவர்களால் பெற்றேன்.

கொங்குப் பெருமக்கள் இந்த வரலாற்று முயற்சியை ஆதரித்து ஊக்கம் தருவார்களாக.

இங்ஙனம்

எழுமாத்தூர்
14-4-94

செ. இராசு

# வாழ்த்துப் பா

எழுமாத்தூர் **பனங்காடர்** ஏற்றவர லாற்றையெலாம்
செழுமையுற ஆராய்ந்து சிறப்புடனே தந்திட்டார்
கெழுதகைய அன்பாளர் கிளர்த்துபுகழ் திருராசு
பழுதின்றி அச்சிட்ட **பனங்காடர்** வாழியவே.

தவத்திரு **சுந்தரசுவாமிகள்**
கௌமார மடாலயம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கொங்கு நாட்டில் பூந்துறைநாடு | ... 5 |
| 2. | ஏற்றமிகு எழுமாத்தூர் | ... 13 |
| 3. | எழுமாத்தூர் மலை | ... 23 |
| 4. | பூந்துறைப் புராணத்தில் எழுமாத்தூர் | ... 29 |
| 5. | பனங்காடை குலம் | ... 34 |
| 6. | காணி ஊர்கள் | ... 38 |
| 7. | பனங்காடைகுலத் தலைவர்கள் | ... 46 |
| 8. | இலக்கியப் புகழ் | ... 49 |
| 9. | கொங்கு ஆவணங்களில் பனங்காடைகுலம் | ... 57 |
| 10. | புலவரைப் போற்றல் | ... 61 |
| 11. | குல குருக்கள் | ... 64 |
| 12. | எழுமாத்தூர் இலக்கியங்கள் | ... 71 |
| 13. | பனங்காடர் நத்தவனப் பட்டயம் | ... 74 |
| 14. | திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனம் | ... 81 |
| 15. | முகுந்த நல்லூர்ப் பட்டயம் | ... 91 |
| 16. | நல்லூர்க் கிரையப் பட்டயம் | ... 94 |

# கொங்கு நாட்டில் பூந்துறைநாடு

## கொங்குநாடு

*கொங்குநாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. நீலகிரி, கோவை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், மதுரை மாவட்டப் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே பழங் கொங்கு நாடாகும்.*

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு

*என்பது தனிப்பாடல்.*

*சேரசோழ பாண்டிய நாட்டுடன் தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று*

வியன் தமிழ்நாடு ஐந்து

*என்று கூறுகிறது. சைவ சமய நூல்களில் மிகத் தொன்மை யானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம்*

தமிழ் மண்டிலம் ஐந்து

என்று தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகளைச் சுட்டிக் காட்டு கிறது.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'கொங்கு நாடு' தனி நாடாகவே குறிக்கப்படுகின்றது. இந்நாட்டு மக்கள் 'கொங்கர்' என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப்படு கின்றனர்.

## பூந்துறை நாடு - பெயர்க்காரணம்

கொங்கு நாடு நிருவாக வசதிக்காக 24 உள் நாடு களாகப் பிரிக்கப்பட்டது. கொங்கில் தொன்மையான வரலாற்றுப் பெருமை உடைய நாடுகளுள் பூந்துறை நாடும் ஒன்று.

கொங்கு நாட்டில் முதன் முதலில் மக்கள் புகுந்து உறைந்த (வசித்த) நாடு ஆதலின் இந்நாட்டுக்குப் பூந்துறை நாடு என்று பெயராயிற்று என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

மற்றும் சிலர் பூக்கள் மிகுதியான நீர்த்துறைகளைப் பெற்று வளம் பெற்ற நாடு இது ஆதலின் பூந்துறைநாடு என்று பெயராயிற்று என்று கூறுவர். இதற்கு ஆதாரமாக மேழி விளக்கம் என்னும் நூலிலிருந்து

திந்திருணி மாஅரசு தேங்கமுகு வாழைபலா
வந்து குலைசாய்ந்து மடல்விரிந்து—சிந்தினதால்
வாய்ந்தரச மொடுபெருகி வயலதனில் செங்நெல்விளை
பூந்துறைசெய் நாடு

என்று வளத்தைப் படம் பிடித்துக் கூறும் பகுதியைச் சுட்டிக்காட்டுவர்.

வேறு சிலர் சங்க காலத்தில் 'புன்றுறை' என்ற கொங்கு நாட்டுக் குறுநில மன்னன் இங்கு ஆட்சி புரிந்ததாக அகநானூறு 44ஆம் பாடல் மூலம் அறிகின்றோம். அந்தப் புன்றுறை என்ற சங்க காலக் குறுநில மன்னன் பெயரா லேயே இந்நாட்டுக்குப் பூந்துறை என்று பெயராயிற்று என்று கூறுவர்.

காவிரிக்கு மேற்கே இருக்கும் காரணத்தால் இந் நாட்டுக்கு மேல்கரைப் பூந்துறை நாடு என்று பெயர் வழங்கிற்று.

## கொங்கு 24 நாடு

1. பூந்துறை நாடு 2. தென்கரை நாடு 3. காங்கேய நாடு 4. பொன்கலூர் நாடு 5. ஆறைநாடு 6. வாரக்க நாடு 7. திருவாவினன்குடி நாடு 8. மணநாடு 9. தலைய நாடு 10. தட்டய நாடு 11. பூவாணிய நாடு 12. அரைய நாடு 13. ஒடுவங்க நாடு 14. வடகரை நாடு 15. கிழங்கு நாடு 16. நல்லுருக்கா நாடு 17. வாழவந்தி நாடு 18. அண்டநாடு 19. வெங்கால நாடு 20. காவடிக்கா நாடு 21. ஆனைமலை நாடு 22. இராசிபுர நாடு 23. காஞ்சிக்கோயில் நாடு 24. குறுப்பு நாடு எனக் கொங்கு நாடு 24 நாடுகள் ஆகும். இதனைக் கீழ்வரும் நாட்டுப் பாடல் விளக்கும்.

சொல்அரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொன்கலூர் நாடுதிகழ் ஆறையணி
தோய்ந்தவா ரக்கநாடு
வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
மணநாடு தலையநாடு

வரதட்டை பூவாணி அரையநாடு ஒடுவங்கம்
வடகரை கிழங்கு நாடு
நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
நாடுவெங் காலநாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காநா டானைமலை
ராசிபுர நாடுநிதமும்
இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
இயல்செறி குறுப்பு நாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலம் தனிலான
இருபத்து நான்குநாடே.

### எல்லைகள்

பூந்துறை போன்ற 24 நாடுகளுக்கும் பழங்காலத்திலேயே எல்லைகள் வகுத்தனர். அந்த எல்லைகள் ஏரி, குளம், ஆறு, மலை, பெருவழி இவைகளை வைத்துப் பிரிக்கப்பட்டன.

மேல்கரைப் பூந்துறை நாட்டுக்கு வடக்கு எல்லை பவானியாறு, கிழக்கு எல்லை காவிரியாறு, தெற்கு எல்லை நொய்யல் என்னும் காஞ்சியாறு, மேற்கு எல்லை சென்னி மலை ஆகியவைகளாகும். இதனை,

உன்னிய தெற்கில் காஞ்சி உயர்நதி வடக்கு வானி
பொன்னிமா நதியே கீழ்ப்பால் புகன்றிடும்
மேற்குத் திக்கில்
சென்னிமா மலையே ஆகும் சிறக்குமுப் பத்தி ரண்டூர்
மின்னுமேல் கரையாய்க் கொண்டு விளங்குபூந்
துறைநன் னாடு

என்ற பூந்துறைப் புராணப் பாடல் விளக்கும்.

## முதன்மை

> 'முந்து பூந்துறை'
> 'ஆதியாம் முந்தின பூந்துறை'
> 'காலாறு நாட்டினில் மேலான பூந்துறை'
> 'அகிலத்தில் உள்ளகொங்கில் மூவெட்டு நாட்டினில்
> அதிகமாம் பூந்துறைசை நாடு'
> 'பழம் பூந்துறை'

என இலக்கியங்கள் புகழ்ந்து கூறும்.

மூவேந்தர்களும் கரூர்ப் பசுபதி ஈசுவரனுக்குக் கோயில் கட்டிக் குடமுழுக்கு நடத்தக் கலசம் வைக்க முற்பட்டனர். அவர்கள் கலசம் வைக்கும்போது அது நிற்கவில்லை. அதனால் பூந்துறை நாட்டுக்கு வந்து பூந்துறை நாட்டுக் கொங்கு வேளாண் மக்களை அழைத்துச் சென்றனர். பூந்துறை நாட்டார் கையில் எடுத்துக் கலசம் வைக்க நின்றதாம். அதனால் மூவேந்தர்களுமே பூந்துறை நாடு அதிகம் சிறப்புள்ளது என்று கூறி இந்நாட்டில் தலயாத் திரை செய்து பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழு மாத்தூர் போன்ற பல இடங்களில் ஆலயத்திருப்பணிகள் பல செய்தனர் என்பது இலக்கியச் செய்தியாகும். இதனை

> 'மூவரையர் பசுபதிபாற் கன்பு கூர்ந்து
> முந்தியகோ புரம்கட்டி முடிநில் லாமல்
> காவலரும் மற்றவரும் பிடிமண் வைக்கக்
> கலசம்நில்லாது இந்நாட்டைக் கருதித் தேடி
> ஆவலுடன் இவர்கையால் கலசம் வைக்க
> அதுநிற்க மூவர்முடி அன்பாய்ச் சூட்டிப்
> பூவுலகில் கொங்கிலிரு பத்து நாட்டில்
> பூந்துறைநாடு அதிகம்எனப் புகன்றிட் டாரே'

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## இலக்கியங்களில் பூந்துறை நாடு

### சென்னிமலைத் தலபுராணம்

வெண்ணி லாத்திரு நீற்றொளி மெய்யினில் விளங்க
நண்ணி மேனார்க்கருள் இருநிதி வழங்கிநன்கு அளித்துப்
பண்ணி சைப்புரா ணம்பயின்று அறம்பயின் றிடலால்
புண்ணி யந்தரு நாடது பூந்துறை நாடு

### ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு

காடெல் லாம்சிறு செந்நெல் விளையும்
கதிரவன் வந்து கமலங்கள் சேரும்
நாடெல் லாம்வெண் தரளம் கொழிக்கும்
நல்ல அல்லியில் வெண்மதி சேரும்
வீடெல் லாம்திரு மின்விளை யாடும்
வேத காவிய புராணங்கள் ஓதும்
பாடெல் லாம்பைந் தமிழதை ஆக்கும்
பன்னு பூந்துறை நாடெங்கள் நாடே

### பூந்துறைப் புராணம்

கொட்டுதல் மேள தாளம் குவிப்பது வளர்செஞ் சாலி
கட்டுதல் கோட்டை யானை கவனவாம் புரவி வெள்ளம்
அட்டுதல் கருப்பஞ் சாறே அழித்தல்தேன் பலாப்ப ழங்கள்
கிட்டுதல் தான தன்மம் கிடைக்கும்பூந் துறைநன் னாடு

### பூந்துறை நாட்டு ஊர்கள்

*பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர், பிடாரியூர், ஈங்கூர், பெருந்துறை, சாத்தம்பூர், காளமங்கலம், குழாநிலை, கிழாம்பாடி, முடக்குறிச்சி, அனுமன் பள்ளி, பழமங்கலம், குலவிளக்கு, காகம், அறச்சலூர்*

விளக்கேத்தி, ஈஞ்சம்பள்ளி, சத்திமங்கலம், சேமூர், மங்கலம், வீரகநல்லூர், ஈரோடு, பேரோடு, சித்தோடு, திண்டல்புதூர், இலவமலை, திருவாச்சி, பனயம்பள்ளி, ஓடாநிலை, முருங்கைத் தொழு ஆகிய 32 பழம்பெரும் ஊர்களைக் கொண்டது பூந்துறை நாடு. இதனைப் பின்வரும் ஊர்த்தொகைப் பாடல் தொகுத்துக் கூறுகிறது.

பூந்துறைசை வெள்ளோடை நசியனூர் எழுமாதை
  புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
  பொன்காள மங்கலமதும்
ஆய்ந்ததமிழ் கூறும் குழாநிலை கிழாம்பாடி
  ஆண்மைகொள் முடக்குறிச்சி
அனுமநகர் பழமங்கை குலவிளக்குக் காகம்
  அறச்சலூர் விளக்கேத்தியும்
வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் சத்திமங் கலமதும்
  மிக்கசே மூர்மங்கலம்
வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு
  மிக்கான திண்டல்புதூர்
சேர்ந்தமழை பெய்திடும் இலவமலை திருவாச்சி
  திகழ்பனசை ஓடாநிலை
தென்முருங் கைத்தொழுவு முப்பத்தி ரண்டூர்
  சிறந்தபூந் துறைசை நாடே

இவ்வூர்களில் சிவன், பெருமாள் கோயில்கள், கல்வெட்டுகள், நடுநற்கள், ஊர்நத்தம், பழைய ஊர் இருக்கைகள் ஆகியன காணப்படும். முன்பு இந்த ஊர்களிலும் இதனை ஒட்டியும் மக்கள் வாழ்ந்தனர். பழமையான 32 ஊர்கள் இன்று புதிய துணை ஊர்கள் பல அமைந்து நூற்றுக்கணக்காகப் பெருகிவிட்டன.

## பூந்துறை நாட்டுச் சபை

பூந்துறை நாட்டு நிர்வாகத்திற்காகவும், நீதிபரிபாலனம் செய்யவும் ஆலயங்களுக்குக் கொடைகள் அளிக்கவும் அளித்த கொடையின் பயன்கள் தவறாது ஆண்டவன் திருக்கோயில்களைச் சென்றடையவும் மேற்பார்வை செய்து நிர்வகிக்கவும் பூந்துறை நாட்டுச் சபை இருந்தது. முக்கியமான முடிவுகளை இச்சபை கூடி முடிவு எடுக்கும். 12-17 ஆம் நூற்றாண்டுகட்கிடையில் இச்சபை இயங்கி நல்லறம் நடத்தியுள்ளது.

பூந்துறை நாட்டுச் சபையில் 32 ஊர்களுக்கு 56 உறுப்பினர்கள் இருந்தனர். உறுப்பினர்களை வீடு என்று பெயரிட்டு அழைத்தனர்.

பூந்துறை நாட்டுச் சபையில் பூந்துறைக்கு 10 உறுப்பினர்கள்; வெள்ளோட்டுக்கு 8 உறுப்பினர்கள்; நசியனூர்க்கு 6 உறுப்பினர்கள்; எழுமாத்தூர்க்கு 4 உறுப்பினர்கள். இவை நான்கும் நகரம் எனப்படும். இந்த நான்கு நகரம் போக ஏனைய 28 ஊர்களுக்கும் ஒவ்வொரு உறுப்பினர்கள். ஆகமொத்தம் 56 உறுப்பினர்கள் கொண்டது பூந்துறை நாட்டுச் சபையாகும்.

> 'நற்கா விரிக்குமேல் கரைதனில் பூந்துறைசை
> நளிர்கொண்ட வெள்ளோடையூர்
> நசையனூர் எழுமாதை எனுமுயர் புகழ்பெரிய
> நகரமொடு நான்கதாக,

என்பது பழம்பாடல் ஒன்றில் கண்ட தொடர்களாகும்.

# ஏற்றமிகு எழுமாத்தூர்

**ஊரின் பழமை**

பூந்துறை நாட்டு 32 ஊர்களின் தலைநகர்களில் ஒன்றாகவும், நான்காவது வீடாகவும், நகர் என்று சிறப்புப் பெயர் பெற்றும் விளங்கும் ஊர் எழுமாத்தூர். வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தொல்பழங்காலப் பெருங்கற்படைச் சின்னங்கள் எழுமாத்தூர்க் கிராமத்தில் காணப்படு கின்றன.

பெருங்கல் வட்டமும், புதைகுழிகளும், முதுமக்கள் தாழிகளும் உடைய இக்கிராமத்தில் 2000 ஆண்டுகட்கு முன்பே மக்கள் வாழ்ந்தனர் என்பது தெளிவு. வேலம் பாளையம் அருகில் கோயில் காட்டருகேயுள்ள காடு களிலும், வாய்க்கால் பகுதிகளிலும் இப்பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன.

**பெயர்க் காரணம்**

ஆண்வடிவம் பெற்ற தேவலோகப் பெண்கள் எழுவர் தம் சாபம் நீங்க வணங்கிய காரணத்தால் இவ்வூர் எழு மாதை—எழுமாத்தூர் என்று பெயர் பெற்றதெனக் கூறுவர்.

'ஏழ்மாதர் வாழ்த்தும் எழுமாதை'
'ஏழ்மாதர் பராவி நிற்க'
'அந்நாளில் ஏழ்மாதர் அரங்கம் மேவி'

என்ற தொடர்களை அதற்கு ஆதாரமாகக் காட்டுவர்.

எழுமாத்தூர் மலையில் பொன் கிடைப்பதாக ஐதீகம். அதனால்தான் எழுமாத்தூர்மலை பொன்மலை, கனககிரி என்றெல்லாம் பெயர் பெற்றது. இங்கு கிடைக்கின்ற பொன்—தங்கம் ஏழு மாற்று உடைய பொன்னாம். அதனால் ஏழு+மாற்று+ஊர் என்பதே எழுமாத்தூர் ஆயிற்று என்பர்.

பெருநல்லாள், சிறுநல்லாள் என்ற சகோதரியர் இருவர் நெடுங்காலம் பொன்னைக் கொழித்தனர் என்றும் அவர்கள் பொன் கொழித்த இடமே இரண்டு மலைகளாக விளங்குகிறது என்றும் இதற்குக் காரணமாகக் கூறுவர்.

எழுமாத்தூரில் அநேகமாக எல்லாப் பரிவார தெய்வக் கோயில்களிலும் சப்த கன்னியர் (எழுமாதர்) உள்ளனர். அதனாலும் எழுமாதை என்ற பெயர் வந்திருக்கலாம்.

### இலக்கியப் புகழ்

'வடி தமிழ் சிறந்த எழுமாதை'
'இங்கிதம்சேர் எழுமாத்தூர்'
'பாங்குபெறும் எழுமாத்தூர்'
'கங்கைகுல எழுமாத்தூர்'
'பொன்புகழ்சேர் எழுமாதை'
'மாநதிசேர் எழுமாதை'
'ஆரணம்சேர் எழுமாதை'
'பேரூர் எழுமாதை'
'முத்தம் செறிகொள் எழுமாதை'
'அழகின் உறையாம் எனச்சொல் எழுமாதை'
'உலகம் புகழும் எழுமாதை'
'வலத்தில் சிறக்கும் எழுமாதை'
'நல்லார் புகழும் எழுமாதை'
'மேல் எழுமாதை'

'திண்கொண்ட மாமதிள்சூழ் எழுமாதை'
'சீர்பூத்த கொங்கு பொலி எழுமாதை'
'தேங்கமலத்து எழுமாதை'
'தேறுதரும்புகழ் எழுமாதை'
'தெற்கெழுங் காற்றுத் தவழும் எழுமாதை'

என்றெல்லாம் பல்வேறு இலக்கியங்கள் பாங்குடன் புகழத் தக்க பெரும் சிறப்புடையது எழுமாத்தூர்.

கொங்கு வேளாளரில் பனங்காடை குலம், செல்லன் குலம், காரி குலம் ஆகியோரும், வேட்டுவர் குலத்தினரும் காணியாளர்கள் ஆவர்.

### சத்தீசுவரன் கோயில்

சருவலோக நாயகி சமேத சத்தீசுவரன் ஊரின் நடு நாயகமாக எழுந்தருளியுள்ளார். வாய்மைஉரைத்த வாணிகன் வணங்கியமையால் சத்தீசன் என்று ஆனார். கிழக்கே விநாயகர் தெற்கே காமதேனு வடக்கே சூலம் மேற்கே தண்டபாணி அமைந்துள்ள கொங்கு நாட்டு வழக்கப்படி. கோயிலுக்கு வெளிப்புறம் உள்ள தீபத்தம் பத்தை வலம் வந்து உள்ளே நுழைந்தால் கவரியுடன் கஜலட்சுமி அமைந்த நுழைவாயிலை அடையலாம். சிவாலய முறைப்படி அமைந்துள்ள இச்சிவாலயத்தில், அகத்தியர் சிற்பம் சோபனமண்டபத்தில் அமைந்துள்ளது சிறப்பாகும். அகத்தியர் வணங்கியதால் அகத்தீசுவரம் என்றும் அகத்தீசுவரர் என்றும் பெயர் அமைந்தது என்பர். 2.2.1977 அன்று சத்தீசுவரர்கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றது

சோபன மண்டபத்தில் நவக்கிரகச் சிற்பங்கள் உள்ளன. தட்சிணா மூர்த்தி ஆலயத்திலும், மகாமண்டபத் தூண்

களிலும் சிறப்புமிகு சிற்பங்கள் உள்ளன. அவற்றில் ஒரு தூணில் அவிநாசியில் சுந்தரர் வரவழைத்த முதலைவாய்ப் பிள்ளை சிற்பம் அழகிய முறையில் அமைந்துள்ளது. எல்லாத் தெய்வத் திருமேனிகட்கும் உற்சவ மூர்த்திகள் உள்ளன.

## பட்டீசுவரன் கோயில்

எழுமாத்தூர்க் கிராமத்தின் ஒரு பகுதியாகிய அவலூரில் பட்டீசுவரர் திருக்கோயில் முன்பு சிறப்புடன் விளங்கியது. இன்று கோயில் அழிந்து சிதைந்த சிறு சிவலிங்கமும் மிகவும் அழகிய நந்தியும் மட்டுமே உள்ளன. பச்சோட்ட நாதர் என்றும் பெயர் வழங்கியதென்பர். பேரூர் இறைவனுக்குப் பட்டீசுவரர் என்றும், பாப்பினி இறைவனுக்குப் பச்சோட்ட நாதர் என்றும் பெயர். இரண்டு பெயர்களையும் அவலூர்ச் சிவாலயம் பெற்று விளங்குவது சிறப்புக்குரியது.

## வரதராசப் பெருமாள் கோயில்

ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராசப் பெருமாள் கோயில் மிகச் சிறப்பான முறையில் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது.

## பொன்காளியம்மன் கோயில்

ஊரின் குலதெய்வமாக விளங்குபவள் பொன்காளி யம்மன். கோயில் அழகிய புதிய திருப்பணியுடன் பொலிவு பெற்றுத் திகழுகிறது. 1973 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி திருப்பணி தொடங்கி 19-5-1978 அன்று சிறப்பாகக் குடமுழுக்கு விழாக்கண்ட கோயில்,

கருவறையில் 8 கை துர்க்கையாக அம்மன் அருள் பாலிக்கின்றாள். மூன்று நிலைக் கோபுரம். அர்த்த மண்டபத்தில் உற்சவ மூர்த்தியும், மகாமண்டபத்தில் சித்தி விநாயகரும் உள்ளனர். பரந்த அகன்ற முன் மண்டபம் கோயிலுக்கு அழகூட்டுகிறது.

மாசிமலையான் திருக்கோயிலில் காவல் தெய்வமாக விளங்குகிறார்.

**காசினியில் கருதுவோர் தமக்கெலாம் கருணையுடன்**
**ஆசிலா வரங்கள் அளிக்கும் அண்ணல்**
**வீசுபுகழ் எழுமாதை நகரில் விளங்கும்**
**மாசிமலையான் மலரடி மனத்துள் வைப்பாம்**

என்று அன்பர்கள் மாசிமலையான் சுவாமியை வணங்கு கின்றனர்.

தேவாத்தாள், சவளாத்தாள், சப்த கன்னியர் உள்ளனர். நவராத்திரி விழாவும் அமாவாசை பௌர்ணமி அன்று சிறப்புப் பூசைகளும், தமிழ் வருடப் பிறப்பு விழாவும் மிகவும் சிறப்புடன் நடைபெறுகின்றன. கோமணாண்டி வகையினர் 12 குடும்பத்தார் சிறப்புடன் பூசை செய்து வருகின்றனர். (தென்முகம் 6, வடமுகம் 6, தலவிருட்சம் போன்று பெரிய வேப்பமரம் கோயிலில் உள்ளது. மாசி மலையான் கோயில் அருகே கருப்பணசாமி சந்நதி உள்ளது. அலுவலக அறை புதியதாகக் கட்டப்பட்டுள்ளது.

## அண்ணன்மார் கோயில்

கொங்கு வேளாளர்களில் வரகு தின்னாப் பெருங் குடியர் குலத்தில் பிறந்து தெய்வத் தன்மை பெற்று

கொங்கு வேளாளர்களின் குலதெய்வமாக மாறியவர்கள் பொன்னர் சங்கர் என்னும் அண்ணன்மார் ஆவர். அவர்கள் கோயில் கொங்கு நாடெங்கும் பரவலாகக் காணப்படுகிறது. எழுமாத்தூர் அண்ணன்மார் கோயில் மிகச் சிறப்புடன் விளங்குகிறது. மகாமுனிகளும், குதிரை வாகனங்களும், பாம்பாட்டி உருவங்களும் அழகுபெற அமைக்கப்பட்டுள்ளன. வேல்கள் பலவற்றில் அவைகளை அளித்தவர் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பொன்னர், சங்கர், தங்காத்தாள், அத்தைமக்கள், வீரமலைச் சாம்புவன், மாயவனார், பெரியக்காண்டிஅம்மன், கருப்பணன், கன்னிமார், மகாமுனி முதலிய அனைவருக்கும் ஏற்ற சந்நதிகள் உள்ளன.

## செல்லியம்மன் கோயில்

செல்லியம்மன் என்று அழைக்கப்படுவது செல்லாண்டி அம்மனேயாகும். மதுக்கரைச் செல்லாண்டியம்மனே எல்லாச் செல்லாண்டியம்மன்—செல்லியம்மன், செல்வநாயகி கோயில்கட்கு மூலக் கோயிலாகும். அங்கிருந்து பிடிமண் கொண்டுவந்து கொங்கு நாடெங்கும் பல செல்லியம்மன் கோயில்களை அமைத்துள்ளனர்.

## அங்காளம்மன் கோயில்

அங்காளம்மனை அங்காள பரமேசுவரி, அங்கியம்மன் என்றும் அழைப்பர். இக்கோயிலில் அம்மனுக்குச் சிம்ம வாகனத்திற்குப் பதிலாக நந்திவாகனம் உள்ளது சிறப்பாகும். இராசராசன் காலத்தில் தஞ்சையில் நந்திபிடாரி கோயில் அமைக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தஞ்சையின் வடக்கில் நந்திவாகனத்துடன்

அக்கோயில் இன்றும் உள்ளது. இக்கோயிலில் திருப்பணி நடைபெற்று வருகிறது. இங்கு கருப்பண்ணன், மலையாளக் கருப்பண்ணன் ஆகியோருக்குத் தனிச் சந்நதிகள் உள்ளன.

## பகவதியம்மன் கோயில்

அவலூரில் பகவதியம்மன் கோயில் உள்ளது. அழகிய தெய்வப் படிமங்கள் உள்ளன. பழைய பட்டீச்சுவரர் இக் கோயில் அருகிலேயே எழுந்தருளியுள்ளார். அருகில் பகவதியம்மன் தீர்த்தக் கிணறு உள்ளது.

## குமாரத்தி கோயில்

வேலம்பாளையம் அருகே குமாரத்தி கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலிலும் குப்பியண்ணன் சந்நதி உள்ளது.

## அத்தனூரம்மன் கோயில்

வேலம்பாளையம் அருகில் கோயில்காடு என்னும் பகுதியில் என்றும் நீர் வற்றாத தேவாழிப்பாறை அருகில் தொன்மையான அத்தனூரம்மன் கோயில் உள்ளது. குப்பியண்ணன், கருப்பணசாமி, கன்னிமாருக்குத் தனிச் சந்நதிகள் உள்ளன. குப்பியண்ணன் மாவிலிங்க மரச் சின்னத்தில் எழுந்தருளியுள்ளார்.

## ஆயி அம்மன் கோயில்

ஊருக்குக் கிழக்கே ஆயி அம்மன் கோயில் உள்ளது. மிகவும் தொன்மையான சிற்பம். 8 கைகளுடன் அம்மன்

விளங்குகிறார். இக்கோயிலில் மிகப் பழமையான நடுகல் ஒன்று காணப்படுவது சிறப்புக்குரியதாகும். எழுமாத்தூர் மக்களின் உயரிய வீரப்பண்பிற்கு அந்நடுகல் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

## குப்பியண்ணன் கோயில்

வேலம்பாளையம் அருகில் துக்காச்சி என்னும் பகுதியில் செல்வக்குமாரசுவாமி, குப்பியண்ணசுவாமி திருக்கோயில்கள் அமைந்துள்ளன மிக அழகிய புதிய திருப்பணிகள் முறைப்படி செய்யப்பட்டு 23-6-1983இல் குடமுழுக்கு விழா மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

செல்வக்குமாரர் கோயிலில் வள்ளி தெய்வயானை சந்நதி நாகருடன் மேற்குத் திருச்சுற்றில் அமைந்துள்ளது. குப்பியண்ணசுவாமி வேங்கை மரச் சின்னத்தில் எழுந்தருளியுள்ளார்.

இப்புவிக்குள் இயங்கிவரும் எவ்வுயிரும்
இருவினையால் வரும்துன் பங்கள்
வெப்புவினால் வருகின்ற வேகமிகு
விஷநோய்கள் விலங்கிப் போக்கி
அப்புவிக்குள் அமுதமதை அளவளாவி
அப்பிணியை அகற்றுமெங்கள்
குப்பண்ணக் கோமகனீன் குரைகழற்சே
வடியிணையைக் கொண்டு வாழ்வாம்

என்று அடியார்கள் குப்பியண்ணசுவாமியைப் போற்றிப் பாடி வணங்கி வருகின்றனர்.

எழுமாத்தூர்க் கிராமத்தில் ஏறிப்பாழியில் உள்ள சுனையைப் பாண்டவர் சுனை என்கின்றனர். எழுமாத்தூரில் கோட்டைமேடு என விளங்கும் பகுதியில் முன்பு

மண்கோட்டை இருந்திருக்கவேண்டும். சில இடங்கள் நத்தக்காடு என்று அழைக்கப்படுகின்றன. அவை பண்டைய ஊர்ப்பகுதிகள் ஆகும். கோயில் காரியங்களிலும் கிராமத்தின் ஒட்டுமொத்தப் பன்முக வளர்ச்சிக்காகவும் பிற காணியாளர்களுடன் இணைந்து பனங்காடர் குலத்தினர் மிகச் சிறப்பாகப் பணி புரிந்து வருகின்றனர்.

## திருப்பணிப் பெருமை

எழுமாத்தூரில் கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன. இன்னும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. புதிய கோயில் ஒன்றை நிர்மாணிப்பதைக் காட்டிலும் பழைய கோயில்களைத் திருப்பணி செய்வதே மிகவும் சிறப்புடையதாகும். பழைய கோயில்களைத் திருப்பணி செய்பவர்கள் புதிய கோயில் கட்டுவதைக் காட்டிலும் நான்கு மடங்கு புண்ணியத்தைப் பெறுவர் என்று காஞ்சிப்புராணம் சிவ புண்ணியப் படலப் பாடல் நன்கு விளக்குகிறது.

'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாகிய கோபுர நெடுமதில் பிறவும்
தெரிந்து முன்னையில் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்'

என்பது அப்பாடலாகும்.

தென்பாண்டி நாட்டுத் தென்காசிக் கோயிலைக் கட்டிய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தெய்வச் செயலால் அவன் அமைத்த விசுவநாதர் கோயிலைப் பிற்காலத்தவர் மேலே விரிவு செய்து திருப்பணி செய்து பராமரிக்க வேண்டும் என்றும் அப்படிப்பட்டவர் கால்களில் விழுந்து

பணி செய்வதாகக் கூறிப் பாடிய பாடல் உள்ளத்தை உருக்குவதாகும்.

'சேலே றியவயல் தென்காசி ஆலயம்
 தெய்வச்செய
லாலே சமைந்ததிங்கு என்செயல் அல்ல
 அதனை இன்னம்
மேலே விரிவுசெய் தேபுரப் பார்அடி
 வீழ்ந்து அவர்தம்
பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம
 பாண்டியனே'

என்பது அவர் பாடிய பாடல். அவ்வாறே எழுமாத்தூர்க் கோயில்களை விரிவாக்கிப் புதுப்பிக்கும் எழுமாத்தூர்க் காணியாளர்கள் நம் வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள். வாழ்க அவர்கள் புகழ்!

# எழுமாத்தூர் மலை

## பல்வேறு பெயர்கள்

எழுமாத்தூர் மலைக்குக் கனககிரி, கனகமலை, கனகக்கோடு, கனக மாமலை, கனக நன்மலை, கனகா சலம், கனகக் குன்று, கனக வெற்பு எனப் பல பெயர்கள் உண்டு. கனகம் என்றால் பொன் என்று பொருள். எனவே எழுமாத்தூர் மலைக்குப் 'பொன்மலை' என்ற பெயரும் உண்டு. தாழைநகம் என்ற இலக்கியப் பெயரும் பெற்றுள்ளது (தாழை = பொன். நகம் = மலை.).

மாட்டின்மீது போடப்பெற்ற பொதி இருபுறமும் சமமாகக் காட்சியளிப்பதுபோல் இம்மலை தெரிவதால் இதற்குப் பொதிய மலை, பொதிய மாமலை என்ற பெயரும் உண்டு. குறுப்புநாடு முதலிய பல்வேறு நாடுகளில் குடியேறிய பனங்காடர்குலத் தலைவர்கள் இடையில் பல மலைகள் இருப்பினும் தங்களது பொதிய மலை யாகிய இக் கனககிரி (எழுமாத்தூர்) மலைக்கே வேட்டை யாட வருவர் என்பது கூறப்பட்டுள்ளது.

## பூந்துறை நாட்டு மலைகளில் ஒன்று

கொங்கு நாடு மலைவளம் மிக்கது. கொங்கு நாட்டை மலை மண்டலம் என்றும், கொங்கு மலைநாடு என்றும் பட்டயங்கள் அழைக்கின்றன. கொங்கு நாட்டு மலை களைத் தொகுத்துக் கொங்கு மண்டல சதகம் கூறுவது போல் சில இலக்கியங்கள் பூந்துறை நாட்டு மலைகளைத் தொகுத்துக் கூறுகிறது.

சென்னிமலைத் தலபுராணம் செப்பேடு கண்ட சருக்கத்தில் பூந்துறை நாட்டு மலைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

சென்னிகிரி நாககிரி சேர்ந்தபொன்னி கிரீசன்வேள்
கன்னல் அருள் கனககிரி கதித்ததிண்டல் கிரிவேலர்
மன்னுமறச் சாலைகிரி மங்கலகிரி யின்மாலும்
துன்னுசங்க கிரிகள் எட்டும் சூழ்ந்திடுபூந் துறைநாடே

என்பது அப்பாடலாகும்.

புதுநகர் நல்லணவேள் காதல் நூலில் சில கொங்கு மலைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

வானுலவும் சென்னி மலைகனக மாமலையும்
தேனுலவும் நாககிரி திண்டல்மலை யும்சிறந்த

வெள்ளிமலை மங்கலகிரி மேலணி அரங்கமலை
புள்ளுலவும் செண்பகமாம் பொற்புறும்ஊ ராட்சிமலை

என்று தவமுனிவர் எண்கண்ணார் போற்றுகின்ற
குன்றதிபன் மிக்கான கொற்றவனாம் நல்லணவேள்

என்பது அப்பாடலாகும்.

காளியண்ணப் புலவர் பாடிய பூந்துறைப் புராணத்தில் கீழ்க்கரை, மேல்க்கரை ஆகிய இருபூந்துறை நாடுகளிலும் உள்ள பதினேழு மலைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

சங்ககிரி மத்யகிரி அரவகிரி மகவைத்
தான்கொல்லிகிரி அகத்ய கிரியும்
மங்கலகிரி ஊராட்சிகிரி திண்டல்கிரி யும்வளர்
கன்னிகிரி செண்பககிரி வெண்கிரியும்
துங்கமிகும் கனககிரி நாககிரி பொதிகைசூழ்
அணிஅரங்க கிரிரத்ன கிரியுடனே

புங்கவர் சூழ் சென்னிகிரி மேலோங்கி வாழும்
புண்யகிரி பதினேழ்சூழ் பூந்துறைநன் னாடே

இவற்றுள் கனககிரி ஒன்றாகக் கூறப்படுகிறது.

## அருணகிரியார் பாடிய கனககிரி—எழுமாத்தூர்மலையே

கொங்கு நாட்டுக்கு மூன்று முறை வருகை தந்து ஏறக்குறைய 45 தலங்கட்குச் சந்தத் தமிழில் திருப்புகழ்ப் பாக்களைப் பாடி மகிழ்ந்த அருணகிரிநாதர் எழுமாத்தூர் மலைக்கும் வருகை புரிந்து 'கனககிரி' என்ற பெயரில் பாடியுள்ளார். கனககிரி கொங்கு நாட்டுப் பூந்துறை நாட்டு எழுமாத்தூர் மலையே என்பது மேற்கண்ட பாடல்கள் மூலம் உறுதிப்பட்டுள்ளது.

## எழுமாத்தூர்த் திருப்புகழ்

அரிவையர்கள் தொடரும் இன்பத்து
உலகுநெறி மிகம ருண்டிட்டு
அசடன்என மனது நொந்திட்டு அயராமல்

அனுதினமும் உவகை மிஞ்சிச்
சுகநெறியை விழைவு கொண்டிட்டு
அவநெறியின் விழைவும் ஒன்றைத்
தவிர்வேனோ

பரிதிமதி நிறைய நின்றஃது
எனஒளிரும் உனது துங்கப்
படிவமுகம் அவைகள் கண்டுற்று அகமேவும்

படர்கள்முழு வதும்அ கன்றுள்
பரிவினொடு துதிபு கன்றெற்
பதயுகளம் இசைவ ணங்கற்கு அருள்வாயே

செருவிலகும் அசுரர் மங்கக்
குலகிரிகள் நடுந டுங்கச்
சிலுசிலென அலைகு லுங்கத் திடமான

செயமுதவும் மலர்பொ ருங்கைத்
தலம்இலகு மயில்கொ ளும்சத்
தியைவிடுதல் புரியு முன்பில் குழகோனே

கருணைபொழி கிருபை முந்தப்
பரிவினொடு கவுரி கொஞ்சக்
கலகலென வருக டம்பத்து இருமார்பா

கரிமுகவர் தமையன் என்றுற்று
இடும்இளைய குமர பண்பில்
கனககிரி இலகு கந்தப் பெருமாளே!

## மலைச் சிறப்பு

பொன் கொழித்த வளமுடைய கனககிரி எழுமாத்தூர் மலையில் பல மூலிகை விசேடங்கள் இன்றும் உள்ளன. மலை ஏற வடக்கு தெற்குப் புறங்களில் படிக்கட்டுக்கள் அமைந்துள்ளன. மலையேறும் போது எந்தவிதச் சலிப்பும் தெரிவதில்லை. வயோதிகர்களும் சிறுவர்களும்கூட எளிதாக ஏறுகின்றனர். மலையில் சுகமான காற்று வீசி மனமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. மலையின் நாற்புறத்தும் ஏற்பட்டுள்ள விவசாய, தொழில் வளம் பெருமை தரும்படி காட்சியளிக்கிறது.

பூந்துறைப் புராணத்தில் சிறப்பிக்கப்பெற்ற காணாச் சுனையும், கருநொச்சியும், சித்தர் சமாதியும், தெய்வீக நலமும் உடையது எழுமாத்தூர் மலை. பால தண்டபாணியாக முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக எழுந்தருளியுள்ளார். விநாயகர் சந்நதியுள்ளது.

முருகப் பெருமான் சந்நதிக்குச் செல்லுமுன் வழியில் சத்திகிரி, சிவகிரிகளைக் காவடியில் சுமந்த திருக்கோலத்துடன் இடும்பன் சந்நதி உள்ளது. இடும்பனை இடும்பக் குமரன் என்றே கொங்கு நாட்டு இலக்கியங்கள் அழைக்கின்றன. முருகப் பெருமானின் கணத் தலைவரான இடும்பன் சந்நதி எல்லா முருகன் ஆலயங்களில் இருந்தாலும் கொங்கு நாட்டு இடும்பன் சந்நதிகள் முருகனுக்கு முன்பு பூசை பெறும் சிறப்புடையன. முருகப் பெருமானை வேண்டுவோர் இடும்பக் குமரன் வழியாகவே வேண்டுகோளைக் கூறுவது பண்டைய வழக்கம்.

நடுமலையில் சத்யபாமா ருக்மணி சமேத வெங்கடேசப் பெருமான் ஆஞ்சநேயர், பெரிய திருவடி போன்ற பரிவாராதிகளுடன் எழுந்தருளியுள்ளார்.

## அருணகிரிநாதர்

கிழக்கு மலையில் திருப்புகழ் பாடிய அருணகிரிப் பெருமானுக்குத் தனிச் சந்நதியிருந்தது. மக்கள் அப் பழங்காலக் கோயிலை 'அரணைகடி நாதர்' என்றும் சிலர் அழைத்தனர். மக்கள் வசதிக்காக அங்கிருந்த அருணகிரிப் பெருமானை இடும்பன் சந்நதியுடன் இணைத்து வைத்து விட்டனர்.

அருணகிரிநாதர் திருவுருவம் இங்கு இருப்பதே அவர் பாடிய கனககிரி—எழுமாத்தூரே என்பதற்குத் தக்க ஆதாரமாக அமைந்துள்ளது.

மலைக் கோயில்கட்குப் புதிய திருப்பணிகள் செய்து 24-5-1991 இல் சிறப்புடன் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

## 1939 இல் நடைபெற்ற குடமுழுக்கு விழா

எழுமாத்தூர் மலையாகிய கனகிரி முருகப் பெருமான் கனகாசல மூர்த்திக்கு கலியுகாப்தம் 5040 பிரமாதி வருடம் சித்திரை மாதம் 13 ஆம் தேதி 26-4-1939 **அன்று** மிகச் சிறப்புடன் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

குடமுழுக்கு விழாவைத் திருச்செங்கோடு சேனாதிபதிச் சிவக் குருக்கள் தலைமை தாங்கி நடத்தினார். அப்போது மிகச் சிறந்த சிவாச்சாரியர்களாக விளங்கிய சதாசிவக் குருக்கள், சிவ நாககிரி பண்டிதர் ஆகியோர் மற்றும் சைவ சன்மார்க்கம் அறிந்த சிவாச்சாரியர்களும் சேர்ந்து குடமுழுக்கு விழாவில் பங்கேற்றனர்.

எழுமாத்தூர்க் காணியாளர்கள் அனைவரும் அக் குடமுழுக்கு விழாவினைக் கண்டு களித்துத் தாம் இவ் வுலகில் பிறந்து வாழ்ந்ததன் பயனை அனுபவித்தனர். பல நாவலர்கள் 'கதைப் பிரசங்கம்' செய்தனர்.

# பூந்துறைப் புராணத்தில் எழுமாத்தூர்

திருச்செங்கோடு அ. முத்துசாமிக் கோனார் எழுதிய கொங்கு நாட்டு வரலாற்றில் எழுமாத்தூரின் புராணச் சிறப்பைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்- அவர் எழுதியுள்ள செய்திகள் பின் காட்டப்பட்டுள்ள பூந்துறைப் புராணப்பாடல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

முற்காலத்தில் ஏழுமாதர்கள் வந்து அம்மனையாடிய பின்பு பூங்காவில் சென்று விளையாடி ஆங்கு கண்ட ஒரு தீர்த்தத்தில் முழுகி எழுந்தார்கள். எழுவரும் பெண் வடிவு அகன்று ஆண் வடிவமாய்விட்டார்கள். பயந்து நடு நடுங்கி ஓடினார்கள். கணவர்கள் கண்டு மெத்தக் கோபித்து, நங்கையர்களே நீங்கள் பழவினையால் உருவம் மாறப் பெற்றீர்கள். நீங்கள் உடனே நாவலந்தீவு சென்று சிவபிரானைப் பூசிப்பீர்களானால் இத்துயர் நீங்கும். பழைய உருவம் பெறுவீர்கள் என்றனுப்பினர். அவ்வாறே ஏழு பேரும் பூந்துறைநாட்டு எழுமாத்தூர் வந்து சத்தீசுவரரைத் தொழுது அவர் அனுக்கிரகத்தால் பழைய வடிவு பெற்றார்கள்.

அதன் தென்பால் அனுமநதி குரங்குப் பள்ளத்தில் அருகே கனககிரி என்னும் மலையில் விசேஷமான அதிசயங்கள் உண்டு. அதில் சுப்பிரமண்ணியக் கடவுள் சாந்நித்தியமாக விளங்குகிறார்.

சோழ தேசத்து வணிகன் மலைநாட்டுக்குச் சென்று மிளகு வாங்கிப் பல எருதுகளில் ஏற்றிக்கொண்டு இந்த மலையருகேயுள்ள தோப்பில் தங்கி இரவு துயில்

கொண்டான். அதிகாலை ஒரு சித்தசாமி வந்து என்ன பொதி என்றார். கேட்பார் எனக் கருதிப் பயறு என்றார். ஆனால் பயறுதானோ என்று போய்விட்டனர்.

இவன் நாடு புகுந்து மிளகு விலை பேசி மூட்டையை அவிழ்த்துக் கொட்டினான். எல்லாம் பயிறாக இருந்தது. செட்டியைப் புரட்டன் என்று இகழ்ந்தார்கள். எழுமாத்தூர்ச் சித்தர் செய்த செயல் என்று நினைத்து பழையபடி மிளகானால் அந்தத் தொகையைக் கொண்டு எழுமாத்தூரில் ஆலயாதிகள் செய்விக்கிறேன் என வேண்டுதலும் அவ்வாறே ஆயிற்று. அந்தத் தொகையைக் கொண்டு கோபுரம், கோயில் முதலிய பணிவிடை செய்தான்; நற்கதியுற்றான்.

அகத்தியர் பிரமகத்தி நீங்க வந்து பூசை செய்த செய்தி கூறப்படும்போது வாதாபி, வில்வலன் இருவரை அழித்த வரலாறு கூறப்படுகிறது.

1. பையரா அணிந்தசடைப் பரமன் தன்னைப்
பலதேவர் அருச்சித்துத் தென்பால் வைகி
மைதவழும் தாழையொடு பூகம் வாழை
மன்னுபடை ரம்சூழ்ந்த வனத்தில் வைகி
தெய்வம்என வந்துதித்த சப்த மாதர்
செழுமுன்நாள் செய்தசிவ லிங்கம் தன்னைக்
கைகூப்பி எழுமாதைச் சத்தி யீசர்
கழல்இணையைப் பூசித்தார் கருத்தில் வானோர்.

2. அத்தலத்தின் பெருமைதனைச் சிறிது சொல்வேன்
அந்நாளில் எழுமாதர் அரங்கம் மேவி
பத்தியுடன் அம்மனையும் கழங்கும் பந்தும்
பதுமமலர்க் கைசேரப் பரிவால் ஆடி
சித்தம்மகிழ்ந்து ஒருதீர்த்தம் மூழ்க முன்நாள்

செய்தவினைப் பயன்புருட ரூபம் ஆகிப்
பத்தியுடன் எழுந்தோடப் பதிகள் கண்டு
படிசாபம் பிடிஎன்றார் பதைத்தார் மாதர்.

3. மண்ணினில்கா வலம்தீவில் கொங்கில் வைகி
வளர்தாழை பூகம்சந் தனமே வாழை
விண்ணில்உயர் சோலைக்குள் புகுந்து வேத
விதிப்படியே ஒருலிங்கம் விரவில் செய்தே
எண்ணரிய ஆகமநூல் படியே பூசை
இருபத்தோ ராயிரவற் சரமும் செய்வீர்
அண்ணலும்அங்கு எழுந்துவரம் தாமே ஈவார்
அந்நாளில் பொன்னாட்டை அடைகு வீரே.

4. என்றவரால் செய்தலிங்கம் தன்னைப் பூசை
இயற்றுதற்குக் குறுமுனிவன் பின்பு செல்ல
நின்றிடுவா தாவியும்வில் வலனும் வஞ்சம்
நினைத்துஒருவன் அசம்ஆகிச் சித்தன் ஆகி
குன்றுஅனையீர் அடியார்க்குப் பத்தன் அன்னம்
கொள்கஎன்றார் இவர்கொண்டார் குடலில்
பாய்ந்தான்
வன்திறல்வாள் அரக்கன்என வயிற்றில் கையை
வைத்திட்டார் இவர்இருவர் மாண்டார் பின்னும்.

5. அகத்தியற்குப் பிரமகத்தி தோடம் தீர
அன்று இரவில் சிவன்சித்த ரூபம் ஆகி
சகத்தினில்ஏழ் மாதர்தொழும் லிங்கம் தன்னைத்
தான்பூசி எனஇசைத்தான் சாற்றக் கேண்மோ
பகற்பொழுதில் சோமவா ரத்தில் முக்கண்
பகவன்அடி தனைநினைத்தே உண்டி நீத்து
குக்கடவுட்கு அபிடேகம் தூப தீபம்
கொழுங்கடப்ப மலர்சாத்தக் குறைகள் தீரும்.

6. எனச்சொல்லக் குறுமுனிவன் இடம்ஏது என்ன
எழில்அனந்தன் வாயுமுன்நாள் இயல்பொன் மேரில்
சினத்துஎழுந்து வந்துஅநும நதியின்தென்பால்
திகழ்கனகா சலம்ஒன்றுஉண்டு அதனின் கீழ்பால்
பன்த்தொலையா வகைவகையாய் மலரும் காயும்
பழங்களுமே நிறைந்தழகு பரவி அந்த
வனத்துஉயர்க்க தாழையொடு பூகம் வாழை
மன்னியஆ ரம்பலவாய் வயங்கித் தோன்றும்.

7. அம்மலையின் மகத்துவங்கள் சிறிது சொல்வேன்
அதில்காணாச் சுனைஒன்றுஉண்டு அதனில் மூழ்கி
செம்மலராம் கடப்பமலர் தன்னைச் சாத்தி
சிவகுருவாம் குமரவேள் தன்னைப் போற்றி
மும்மலங்கள் அகற்றிடும்சத் தீசர் தம்மை
மொய்குழற் கணேசரைமற்று உள்ளோர் தம்மை
இம்மையில்செய் எனக்கனவு நீத்தான் வேதன்
எழில்புதல்வன் பூசைசெய்து பொதியம் சேர்ந்தான்.

8. கடையுகத்தில் சோணாட்டின் வணிகர் கோமான்
கைப்பொருள்கொண்டு உயர்மேற்கில் கடிதில் எய்தி
பணைபயிற்றும் சேரமான் தனது நாட்டில்
பலவிலங்கால் மிளகுஏற்றிப் பரிவால் எய்தி
தடம்உயர்சந் தாசலம்போல் கனக வெற்பின்
தன்கீழ்பால் கோபுரமும் தன்னைக் கண்டான்
இடம்இதுஎன்று இறங்கினான் அவ்வ னத்தில்
இராமுழுதும் தூங்கினான் இயல்பைக் காணான்.

9. அவ்வனத்தில் விடிந்தபின்பு பரமன் சித்தர்
ஆகியுமே வணிகேசன் அவனைக் கண்டே
எவ்விடம்நீர் இதுஎன்ன சித்தன் கேட்பான்
என்றெண்ணி பசியபயறு என்று சொன்னான்
தொவ்வைஇதழ் கன்னியர்சூழ் சோணாடு எய்தி

குவலயத்தில் மிளகுவிலை கூறிப் பொன்னை
ஒவ்வொருவர்க்கு ஆயிரமாய் வாங்கி மூட்டை
உவந்தளித்தான் பசியபயற்று உருவம் கண்டார்.

10. கண்டவுடன் இவன்புரட்டன் என்று கூற
கண்ணீர்சோர்ந்து அவ்வனத்தில் கண்ட சித்தர்
பண்டையவாய்ச் செய்தால்இப் பொன்னை எல்லாம்
பரிந்தளிப்பேன் உமக்குஎன்று பரிவாய் வேண்டித்
தண்டனிட்டான் சாட்டாங்கம் செய்து பாரில்
திருவருளால் கறியாகச் சிரித்தெல் லோரும்
கண்டவுடன் பசும்பொன்னை அவற்கே நல்கி
கருதியசத் தீசர்எனக் கழறி னாரே.

# பனங்காடை குலம்

கொங்கு வேளாளர் குலங்களில் வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் பெருமையும், தொன்மைப் புகழும் உடைய குலங்களில் பனங்காடை குலமும் ஒன்றாகும்.

பனங்காடை குலம், பனங்காடான் குலம், பனங்காடர் குலம், பனங்காடன் குலம் பனைங்காடை குலம், பனைக்காடை குலம், பனங்காட குலம் என்று பலவாறு அழைக்கப்பெறும் சிறப்புடையது. எழுமாத்தூர் ஓலை ஆவணத்தில் பனங்காடர்குலம் என வருவதால் அப் பெயரே இந்நூல் தலைப்பு ஆயிற்று.

பனங்காடை குலப்பெயர். பனங்காடர் என்பது அக் குலத்திற்கு உரியவர்கள் என்ற பொருளில் அமைந் திருக்கலாம்.

'பனை' என்ற குலக் குறியீட்டைச் சின்னமாகக் கொண்ட காடை குலத்தினர் பனை + காடை = பனங் காடை குலத்தினர் ஆனார்கள். இவர்கள் காடை குலத்தி லிருந்து முற்றிலும் வேறானவர்கள் என்பது வரலாற்றுண்மை. பனங்காடை குலத்திற்கும் காடை குலத்திற்கும் காணியூர்கள் வேறு வேறானவை. குலதெய் வங்களும் வேறு வேறானவை.

கொங்கு வேளாளர் பெருமக்களிடமிருந்து ஆய்வாளர் களை நோக்கி எழும் வினாக்களில் முதன்மையானது காடை குலமும் பனங்காடை குலமும் ஒன்றா? வேறா? என்ற கேள்வியேயாகும்.

அதற்குரிய பதில் இரண்டும் வேறுவேறு குலங்கள் என்பதுதான். பூந்துறைக் காடை குலம் சாகாடை குலம் எனப்பட்டது. அவர்கள் 18 ஊர்களில் குடியேறிப் பாப்பினிக்காடை, கீரனூர்க்காடை, பெருந்துறைக்காடை என்பதுபோல்பெருகினர். 18 வகைக் காடையும் ஒன்றே. ஆனால்பனங்காடை அதனுள் ஒன்றல்ல என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பனங்காடை குலத்தினர் பனை மரத்தை அடையாளச் சின்னமாகக் கொண்டவர்கள் என்பது ஒரு கருத்து.

கொங்கு நாட்டின் பண்டைய மன்னர்கள் சேரர்கள். அவர்கள் காவல் மரம் பனை மரம். அவர்கள் அடையாளப் பூ பனம்பூவாகும். ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியமே

'போந்தை வேம்பே ஆர்எனவரூஉம்'

என்று மூவேந்தர் சின்னங்களைக் குறித்தபோது போந்தை என்று பனைமரத்தையே முதலாவதாகக் குறித்து விளக்குவது சிறப்புடைத்தாகும்.

சங்க இலக்கியங்களில் மிகச் சிறப்பிடம் பெறும் மரங்களில் ஒன்று பனைமரம்; பூக்களில் பனம்பூ ஆகும்.

**'இரும்பனை வெண்தோடு'** (புறநானூறு 45)

**'இரும்பனம் புடையல்'** (புறநானூறு 99, பதிற்றுப்பத்து 42, 57)

**'வண்டு இசைகடவத் தபன்னம் போந்தை'** (பதிற்றுப் பத்து 70)

எனச் சங்க இலக்கியங்களால் பனைமரம் புகழப் பெறும் சிறப்புடையது.

வேந்தர்களும், வீரர்களும் வெற்றிப் பூக்களோடு பனம்பூவையும் கலந்து சூடுவர் என்று ஒரு புலவர் பாடுகிறார். திருஞானசம்பந்தரின் சமயச் சிறப்புள்ள ஒரு நிகழ்ச்சி அவர் ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றியது. பல கோயில்களில் தலவிருட்சமாகப் பனைமரம் உள்ளது. திருப்பனந்தாள், பனைதுறை, பனையம்பள்ளி, பனமரத்துப்பட்டி, பனையூர், பனமங்கலம் என்று பல்வேறு ஊர்ப் பெயர்கள் பனைமரத்தின் அடிப்படையாகப் பிறந்துள்ளது.

**கீரை குலம்** — கீர குலம் என்றும்

**பண்ணை குலம்** — பண்ண குலம் என்றும்

அழைக்கப்பட்டது போல பனை + காடை குலமும் பனங்காட குலம் என்று அழைக்கப்படுவதாயிற்று. பனங்காடை குலம்-பனங்காடை கோத்திரம், பனங்காடை கூட்டம் என்றும் குறிக்கப்பெறும்.

'உயிர் உள்ள பனை மரத்தை வெட்டாதே' என்று ஆணையிட்டான் ஒரு சோழ மன்னன். பனை மரத்தைச் சிறப்பித்துப் 'பனை எழுபது' என்னும் இலக்கியம் உண்டு. பனை மரம் ஜீவமரம் என்றும், கற்பகத்தரு, பூலோக கற்பக விருட்சம் என்றெல்லாம் புகழப் பெறும் சிறப்பினை உடையது. 'பனை இருக்கும் நாட்டில் பஞ்சமில்லை' என்பது பழமொழி.

முழுமையாகப் பயன்தரக்கூடிய பயன்மரங்களில் பனைமரமும் ஒன்று. 'தாள விலாசம்' என்னும் நூல் பனை மரத்தின் 801 வகைப் பயன்களைக் கூறுகிறது. பண்டைக் காலத்தில் பனைமரத்தின் பூ, நொங்கு, பனம் பழம், கிழங்கு இவைகளை வைத்துக் கொண்டு காலத்தை

நிர்ணயம் செய்தனர் என்று சங்கப் பாட்டொன்று கூறுகிறது.

அகப்பொருள் இலக்கணத்தில் 'மடலேறுதல்' பனை யோடு தொடர்புடையது. தமிழ் இலக்கியச் செல்வங்கள் வழிவழியாகப் பாதுகாக்கப்பட்டது பனை ஓலையால் அல்லவா?

இவ்வளவு வரலாற்றுச் சிறப்புமிக்க பனையைத் தங்கள் குலக்குறியாகக் கொண்டதன்மூலம் சேர வேந்த ரோடு தொடர்புடைய குலமாகப் பனங்காடை குலம் விளங்குகிறது என்பது வரலாற்றுண்மையாகும்.

பனங்காடை குலம், இலக்கியங்களில் பல்வேறு வகை களாகப் புகழப்பட்டுள்ளது.

இரவலர்சேர் பனங்காடைகுலம், உற்ற பனங்காடை குலம், கூர் பனங்காடைகுலம், செய்ய பனங்காடைகுலம், திறல் பனங்காடை குலம், பாவலர்சொற் பாடல்படைத்த பனங்காடைகுலம், முந்துபனங்காடைகுலம் என்றெல்லாம் பனங்காடை குலம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

## காணி ஊர்கள்

பனங்காடை குலத்தாரின் உரிமைக்குரிய ஊர்கள் அவர்களின் காணி ஊர்கள் எனப்படும். கோயிலுக்கு உரிமை உடையவர்களாய், ஊர்ப் பொது இடங்களை அனுபவிப்பவராய், ஊர் நிருவாகத்தில் பங்கு உடையவர்களாய் இருப்பவர்களையே அவ்வூர்க் காணியாளர்கள் என்போம்.

### தனிப்பாடல்கள்

பனங்காடை குலத்தாரின் காணிகளைக் குறிப்பிடும் இரண்டு தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. முதல் பாடலில் திங்களூர், எழுமாத்தூர், கொடுமணல், விசயமங்கலம், தென்நெல்லி, பட்டிலூர், திருமுருகன்பூண்டி, குந்தாணி, கச்சுப்பள்ளி, பவானி, மாத்தூர், கொன்னையார், இடையாறு, மானூர், நடுவச்சேரி, கருவலூர், பிரமியம், குறுணி, கடுகநகர், கந்தமாபுரி, குறிச்சி, ஆத்நூர், மருதுறை, கிழாங்குண்டல், சுந்தரபாண்டியநல்லூர், பஞ்சமாதேவி, ஊராட்சிக்கோட்டை, அனுமன்பள்ளி, மொடக்குறிச்சி, ஆனங்கூர், கோனூர், மாவிளம்பதி, திருவைநகர், பனையம்பள்ளி, வைத்தியூர் முதலிய 35 ஊர்கள் காணியூர்களாகக் குறிக்கப்படுகின்றன.

திங்களூர் எழுமாதை கொடுமணல் விசயமங்கலம்
தென்நெல்லி பட்டிலூரு
திருமுருகன் பூண்டிகுந் தாணியும் கச்சிபளி
திருவாணி கூடல்மாத்தூர்

கங்கைபுரி கொன்னையார் இடையாறு மானூர்க்
கதித்தநடு வச்சேரியும்
கருவலூர் பிரமியம் குறுணியும் கடுகநகர்
கந்தமா புரிகுறிச்சியும்

பொங்கமுடன் ஆத்தூரு மருதுறை கிழாங்குண்டல்
புகழ்சுந்தர பாண்டியநல்லூர்
பொருள்பஞ்ச மாதேவி ஊராட்சிக் கோட்டைஅனு
மன்பள்ளி மொடக்குறிச்சி

செங்கைஆ னங்கூரு கோனூரு மாவிளம்
திருவைநகர் பனயம்பள்ளி
சீர்பெருகு வைத்தியூர் பனங்கா டைகுலச்
செல்வமிகு காணியாமே.

மற்றொரு பாடல் எழுமாத்தூரை முதல் ஊராகக் கொண்டு தொடங்குகிறது. 26 ஊர்களைப் பனங்காடை குலத்தார் அரசு செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இதில் முதற்பாடலில் உள்ள சில ஊர்கள் நீக்கப்பட்டுச் சில ஊர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

வடிதமிழ் சிறந்தஎழு மாதைமா னூருமாம்
வானிகூ டல்பிரமியம்
மாவிளம் பதிகுறுணி குந்தாணி பட்டிலூர்
மருதுறை கிழாங்குண்டலும்

இடையாரூர் கச்சிபளி ஊராட்சிக் கோட்டையும்
இனியநடு வச்சேரியும்
இன்பமொடு குறுச்சிஆத் தூர்பஞ்ச மாதேவி
ஏற்கைபெறு ஆறைநகரும்

கடிகமழ்ந் தருள்திங்க ளூர்கொன்னை யாருடன்
கனகபனை யம்பள்ளியும்
காசினி மதிக்கவரு கோனூரு தென்னெல்லி
கதித்தஆ னங்கூரதும்

கொடுமணலும் அவிநாசி அரசுசெய் பனங்காடை
கோதிலக னாகவந்த
கொண்டலே தெய்வ சிகாமணி மகிழ்ந்தருள்
குமாரசின் னயராமனே.

*இப்பாடலில் பனங்காடை குலச் சின்னைய கவுண்டர் இராமன் என்று புகழப்படுவதைக் காணலாம்.*

## கொடுமணல் இலக்கியத்தில்

*கொடுமணல் இலக்கியத்தில் ஒன்றான கந்தசாமி காதல் என்னும் நூலில் பாட்டுடைத் தலைவி, தலைவன் பனங்காடை குலத்துக் கந்தசாமிக் கவுண்டரைத் தேடுமிடத்தில் காணியூர்களையெல்லாம் சொல்லி அதன் தலைவரைக் கண்டீரா என்று கேட்கின்றாள். அழகிய அவ் வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.*

முழுமதிசேர் திருவாரூர் முக்கண்ணி மாதரசே
எழுமாத்தூர்ப் பனங்காடை என்னரசைக் காணீரோ

ஆதரிக்கும் பொன்னரசே அழகான பூவரசே
மாதரசே கொடுமணலூர் மன்னன்வரக் காணீரோ

வானம் பரந்துவரும் வளர்கச்சி நாயகியே
ஆனங்கூர்ப் பனங்காடை அதிபன்வரக் காணீரோ

உறப்பான புக்குளியூர் உற்றஅவி நாசிலிங்கா
சிறப்பான மானூர்ச் சீமானைக் காணீரோ

கஞ்சமலை மேவும் கருணைகண்ணி நாயகியே
பஞ்சமா தேவிநகர் படைத்தவனைக் காணீரோ

முன்னைமறைக் கெட்டாத முருகா் விடைநாதா
சொன்னதொரு கோனூரு சுமுகன்வரக் காணீரோ

வெண்ணைநல் லூருதன்னில் வரும்வேத
மறைப்பொருளே
கொன்னைநகர்ப் பதிஆளும் கொற்றவனைக் காணீரோ

உண்மைதரும் பேரூரில் உகந்துவரும் பட்டிலிங்கா
வண்மை நகராளும் மன்னவனைக் காணீரோ

அண்ணா மலைமேவும் ஆதிபர மேசுரனே
நண்ணாவூர்ப் பனங்காடை நண்பன்வரக் காணீரோ

கட்டுக் கடங்காத கருணைமீ னாட்சியம்மா
பட்டுலூர்ப் பனங்காடை பாக்கியனைக் காணீரோ

தீரா வினைதீர்க்கும் தீர்த்தகிரி நாதா
ஊராட்சிப் பனங்காடை உத்தமனைக் காணீரோ

ஆணித்தேர் ஏறிவரும் அலகுமலைக் குமரா
மாணிதிசேர் மாத்தூர் மன்னவனைக் காணீரோ

மருவளரும் பசுபதி மகாலிங்க நாயகரே
கருவூர்ப் பனங்காடை கண்ணரசைச் காணீரோ

அடையாளங் கொண்டுவந்த அத்தநா ரீசுவரனே
இடையாற்றுப் பனங்காடை இங்குவரக் காணீரோ

நந்தா விளக்கொளியே நல்லமங்கை நாயகியே
குந்தாணி நகர்படைத்த கோமானைக் காணீரோ

தினைப்புனத்து வள்ளிபங்கா செந்தில் அறுமுகனே
அனையபனை யம்பள்ளி அதிபன்வரக் காணீரோ

அடக்கமுள தென்சேரி ஆறுமுக வேலா
முடக்குறிச்சிப் பனங்காடை முன்னவனைக் காணீரோ

மங்கள கலியாணி மசிஉமை மாதாவே
திங்களூர்ப் பனங்காடை தென்னரசைக் காணீரோ

வீத்திருக்கும் விருத்தகிரி வேதாந்தத் துட்பொருளே
ஆத்தூர்ப் பனங்காடை அரசன்வரக் காணீரோ

கண்ணன் மருகா கவலை மலைக்குமரா
மண்ணுலகில் ஈஞ்சநகர் மன்னவனைக் காணீரோ

தேடிவரும் சிவகிரியில் சிங்கார வேல்முருகா
கூடிய மருதுறையூர் கொற்றவனைக் காணீரோ

வில்லால் அடிபட்ட விசுவேசு வரநாதா
நல்லூர்ப் பனங்காடை நண்பன்வரக் காணீரோ

எதிர்ப்பவர்க்குச் சிங்கம் ஏற்பவர்க்குச் சொர்ணமுகில்
கதித்தகிரி படைத்த கண்ணரசைக் காணீரோ

தேசமெங்கும் புகழ்விளங்கும் திருமுரு கண்பூண்டி
வாச முடன்படைத்த மன்னவனைக் காணீரோ

இப்பகுதியில் பனங்காடை குலத்தார் எழுமாத்தூர், கொடுமணல், பிரமியம், திருகுருணி, ஆனங்கூர், மானூர், பஞ்சமாதேவி, கோனூர், கொன்னையாறு, நடுவச்சேரி, வண்மைநகர், பவானி, பட்டிலூர், ஊராட்சிக்கோட்டை, மாத்தூர், கருவூர், தென்னெல்லி, இடையாறு, கிழாங் குண்டல், குந்தாணி, திரவியமாநகர், குறிச்சி, பனையம் பள்ளி, மொடக்குறிச்சி, திங்களூர், ஆத்தூர், மாவிளம்பதி, ஈஞ்சம்பள்ளி, வயித்தம், மருதுறை, நல்லூர், கதித்தமலை, திருமுருகன்பூண்டி ஆகிய ஊர்களுக்கு உரிமையுடைய வர்கள் என்பது கூறப்படுகிறது.

**வேட்டைக்குக் கூடிய கூட்டம்**

கொடுமணல் பனங்காடை குலத்தார் தலைநகரங் களில் ஒன்று. எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தார் ஏற்படுத்திய காணியூர்களில் ஒன்று. கொடுமணல் பனங் காடை கந்தசாமி மன்னன் வேட்டைக்குச் செல்லுகிறான். கொடிய விலங்குகளைக் கொன்று மக்களையும் கால்நடை களையும் காப்பாற்றுவதே அவ் வேட்டையின் நோக்கம் ஆகும்.

பனங்காடை கந்தசாமியுடன் வேட்டைமேற் செல்லக் கொங்கு நாட்டிலுள்ள பங்காளிமார் அனைவரும் ஒன்றாகக்கூடுகின்றனர். ஆத்தூர்ப் பனங்காடை குலத்தார் எழுமாத்தூர் வழியாகக் கொடுமணல் பூங்காவிற்கு வந்தனர். பிரமியம், பவானி, மருதுறை, திங்களூர் முதலிய ஊர்ப் பனங்காடையினர் கொடுமணல் மாரியம்மன் கோயிலில் கூடினர். மொடக்குறிச்சி, கோனூர், கொன்னையாறு, மானூர், பனையம்பள்ளி, ஆனங்கூர், அஞ்சூர்ப் பங்காளிகள் கொடுமணல் வன்னீசுபரன் கோயிலில் கூடினார். நடுவச்சேரிக்காரர்கள் திருப்பூர் மார்க்கமாக வந்தனர். எல்லோருக்கும் வெற்றிலை பாக்குக் கொடுக்கப் பட்டது. அதன் மூலம் காணியூர்கள் புலப்படுகிறது.

சென்றதொரு ஆத்தூரார் சேனைதளம் அத்தனையும்
இன்று பயணம்என்று எல்லோரும் தான்கூடி

அழகான வெண்பரியும் ஆனைமேல் பேரிகையும்
நளராசன் ஆத்தூரார் நற்சிவிகை மீதேறி

ஓங்குபுகழ்க் காவேரி ஓடீந் தனில்ஏறி
பாங்குபெறும் எழுமாத்தூர்ப் பாதைவந்து சேரலுற்றார்

இங்கிதம்சேர் எழுமாத்தூர் இயல்பான மன்னனுடன்
பொங்கமுள்ள கொடுமணலூர்ப் பூங்காவில் வந்திருந்தார்

## ருதுறைக்காணி

நொய்யல் கரையில் உள்ளே காங்கேய நாட்டு மருதுறை சமயச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையும் கொண்டது. சுந்தரர் மடம் நிறுவிய பேரூர். அ மருதுறைக்குரிய முதல் காணியாளர்கள் பனங்காடை குலத்தினர் என்று தனிப்பாடல் ஒன்று கூறுகிறது.

'அவனிமிசை மருதுறையில்வாழ் அதிகபனங் காடையே'

என்பது அப்பாடல் பகுதியாகும்.

## பொங்கலூர் நாட்டில்

கொங்கு 24 நாடுகளில் பொங்கலூர் நாடு ஒன்றாகும். அங்கு கொங்கு வேளாளரில் பல்வேறு குலத்தார் சிறப்புடன் வாழ்கின்றனர் என்று கூறும் ஓதாளர் குறவஞ்சி பனங்காடை குலத்தைச் சிறப்பு நோக்கி இறுதியில் வைத்துக் கூறுகிறது. சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல் என்ற விதிப்படிப் பனங்காடை குலம் குறிக்கப்பட்டுள்ளது.

பொன்னர் ஓதாள கோத்திரர் குழாயர்
பொருந்து சாத்தந்தை செம்பர் செம்பூதர்
கண்ணன் மாடையும் பூசனும் வெண்டுவர்
காடை செங்கண்ணர் பொருளந்தை பயிரர்
எண்ணை ஆந்தை கோவேந்தர் பனங்காடை
இன்னம் நற்குல வேளிர்கள் வாழ்வுற்றிலங்கும்
இனிய பொங்கலூர் நாடெங்கள் நாடே

பொங்கலூர் நாட்டில் திருப்பூர், நல்லூர், அழுக்கயம், மண்ணறை, ஊற்றலூர் போன்ற ஊர்களில் பனங்காடை வகுத்தார் வாழ்கின்றனர்.

## குறுப்பு வளநாட்டு அதிபன்

பல ஊர்களுக்குத் தலைவர்களாக விளங்கினாலும் பனங்காடை குலத்தினர் பூந்துறை நாட்டைப் போல் குறுப்பு நாட்டுக்கும் அதிபர்களாக விளங்குகின்றனர் என்று கூறப்படுகின்றனர்,

நல்லூர் கொடுமணலூர் நாரிஎழு மாதைநகர்
வெல்லும் மருதுறையும் விளங்குதிங்கள் மாநகரும்

கோனூர் முடக்குறிச்சி குவலயத்தில் ஆத்தூரும்
மானூர் பிரமியமும் வானிகூடல்பதியும்

ஆனங்கூர் கொன்னை ஆறும் பனயம்பள்ளி
சேலை நகர்க்கதிபன் செய்யபனங் காடைகுலன்

நலஞ்சிறந்த காராளன் நற்குவளை மார்பன்
குலமிகுந்த சோமன்எனும் குறுப்புவள நாடதிபன்

என்பது கொடுமணல் இலக்கிய வரிகளாகும்.

## பனங்காடை குலத் தலைவர்கள்

பனங்காடை குலத் தலைவர்கள் பல்வேறு சிறப்பு அடைமொழிகளால் போற்றப்பட்டுள்ளனர்.

அதிபன், அரசு, ஆளும் புவிராசன், இராசனுக்கு ராசன், காக்கும் புவிராசன், கிரீடபதி, குறுப்புவள நாடதிபன், செகராசராசன், துரைராசராசன், தென்னவன், நராதிபன், பரிநகுலன், பவானிகூடற்கதிபன், மகராசன், மன்னவன், முடிமன்னர் கொண்டாடும் முத்துக்குமரன், மேழிக்கொடி வேந்தன், வீரசோழபுர நாடதிபன் என்பன அவ் அடைமொழிகளாகும்.

எழுமாத்தூர் பொன்மேழித் துவசனாகிய பனங்காடை கோத்திரத்து முத்துக் காங்கேய கவுண்டன் மகன் பொய்ங்காக் கவுண்டப் பட்டக்காரன் என்பது ஒரு பனங்காடை குலத்தலைவர் பெயராகும்.

பனங்காடை குலத் தலைவர்களின் பண்பு நலன்கள் இலக்கியங்கள் மூலம் புலப்படுகிறது.

அரிச்சந்திரன், ஆர்க்கும் சகாயன், இரதி மதனன், ஏதுக்கும் அஞ்சாத இங்கித குமரன், காமன், குபேரன், குவளையணி மார்பன், குலஞ்சிறந்த காராளன், குலம் மிகுந்த சோமன், கெம்பீரன், சமயசஞ்சீவி, செங்குவளை மார்பன், சேவழகன், சீமான், தீர்க்கமுள்ள காராளன், நலஞ்சிறந்த காராளன், நல்மொழியான், நாவலர்கள் கொண்டாடும் தலைவன், நற்குவளை மார்பன், பட்டாபிராமன், பண்பான யோகன், பாகான மதரூபன், மாவழ

கன், மேழிக்கொடியோன், மோதுபுகழ்க் கெட்டிமுத்து, வாகுகன உல்லாசன், சித்திரமொழி நேயன் சிறந்த கந்தசாமி மன்னன், குவளையணி மார்பன் குபேரன் கந்த காமி மன்னன், செந்தமிழ்சேர் நல்லூர் சிறந்த கந்தசாமி மன்னன், அன்பான கொடுமணலூர் ஆளும் கந்தசாமி மன்னன் என்று கந்தசாமி காதல் தலைவன் பனங்காடை கந்தசாமி சிறப்பிக்கப்பட்டுள்ளார். கந்தசாமியின் பரம் பரை கீழ்வருமாறு சுட்டிக் கூறப்பட்டுள்ளது.

வேந்தன்எழு மாதைநகர் விளங்குபனங் காடைகுலன்
சாந்த குணவசனன் சாமிமகா ராசன் அருள்

ஆழிசூழ் கொடுமணலூர் ஆளும் புவிராசன்
மேழிக் கொடிக்கதிபன் மிக்கபிடா ரப்பன்அருள்

வாகுகன உல்லாசன் வளர்பிடா ரப்பன்அருள்
பாகான ரூபன் பழனிமகா ராசன்அருள்

பண்பான யோகன் பழனிமகா ராசன் அருள்
நண்பான சீர்கந்த சாமி நராதிபன்

என்பது அப்பகுதியாகும்.

மற்றோர் இலக்கியப் பகுதி பனங்காடை குலத் தலைவர்களின் பண்பு நலன்களைச் சித்தரிக்கிறது.

பருதிதீர் பொய்த்தாலும் பரிதிமதி பொய்த்தாலும்
சுருதிமறை பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்

இமையவர்கள் பொய்த்தாலும் இந்திரனார் பொய்த்தாலும்
உமைபாகர் கிருபையினால் உற்றமொழி பொய்யாதான்

மண்ணாளும் வேந்தருக்கும் மாநிலத்தில் உள்ளவர்க்கும்
கண்ணாரக் கண்டதெய்வம் காராளத் தெய்வம்

என்பது அப்பகுதியாகும்.

பனங்காடைக் குலத்தவர்கள் அன்ன தானப் பெருமை மற்றொரு பாடலில் இடம்பெறுகிறது. அவர்கள்

**'வல்லாண்மை கொண்டுநித்தம்
மறையவர்க்குச் சொர்ணமிடுவார்'**

என்றும்,

**'நித்தநித்தம் தவறாமல்
நீணிலத்தில் அன்னமிடுவார்'**

என்றும்,

**'சாமம் என்று வந்தவர்க்குச்
சலியாமல் அன்னமிடுவார்'**

என்றும் கூறப்பட்டுள்ளது.

## இலக்கியப் புகழ்

பல்வேறு இலக்கியங்களாலும், தனிப்பாடல்களாலும் எழுமாத்தூரும், எழுமாத்தூரர்க் காணியாளர்களும் புகழ்ப் பட்டுள்ளனர்.

### தனிப்பாடல்

தாழைவனம் பூகவனம் சந்தனப்பூங் காவனமும்
வாழைவனம் சூழும்எழு மாத்தூரே—தாழை
நகமே யடர்ந்த நகமே யடர்ந்த
நகமே யடர்ந்த நகர்

தாழை நகம் என்பது பொன்மலை—கனககிரி என்னும் பொருள் உடைய சொல்லாகும்.

### சென்னிமலைத் தலபுராணம்

கொழுமாத்துங் கமழவிழுஞ் செழுஞ்சோலைக் குவளைமலர்
கெழுமாத்தூர்க் கும்தாது வயலின்வளம் கிளர்மூதூர்
செழுமாத்தூ ரியமுழங்கு காஞ்சியில்சீர் அறம்புரிய
எழுமாத்தூர் சத்திநா யகன்வைகும் எழுமாத்தூர்

கொழுமையாகிய மாங்கனிகள் தூய்மையாகிய மணம் கமழும்படி உதிர்கின்ற செழுமையாகிய சோலைகளும் குவளைமலர்களில் பொருந்திய பொன்னிறம் மிகப்பெற்ற மகரந்தம் நிறைந்த வயல்களின் வளமும், விளங்குகின்ற பழமையாக ஊராக உள்ளது; அழகாகிய வண்டுகளும்

வாத்தியங்களும் ஒலிக்கின்ற காஞ்சிபுரத்தில் சிறப்பாகிய அறங்களைச் செய்தற்பொருட்டு எழுந்த அம்பிகை பொருந்திய சக்தி நாயகன் வாழ்கின்ற எழுமாத்தூர் என்பது இதன் பொருள்.

## முடிசூட்டிய பனங்காடை குலர்

கலியுகம் 4035 குரோதன ஆண்டு தை மாதம் ஒன்பதாம் தேதி ரேவதி நட்சத்திரம் வெள்ளிக்கிழமை சுபதினத்தில் எழுமாத்தூர்ப் பனங்காடைகுல முத்துக் காங்கய கவுண்டர் மகன் பொன்கவுண்டருக்குச் சோழ அரசர் முடி சூட்டினர். சேவூரில் ஆட்சிபுரிந்த சோழ அரசன் திருமுருகன் பூண்டி முருகநாதர் முன்பாக சிவசுப்பிரமணிய தேசிகர் பட்டம் கட்டினார் என்று ஒரு தனிப்பாடல் புகழுகிறது.

வளமைதிகழ் கலியுகம் சகரநா லாயிரத்தி
 வழங்குமுப் பத்தைந்துமேல்
வருகின்ற குரோதன ஆண்டுதை மாசமும்
 வடிதமிழ் விளங்கவந்த
அழகுதிகழ் ஒன்பதாம் திகதிரே வதிவெள்ளி
 அன்புற்ற சுபதினத்தில்
ஆதிக்கன் எழுமாதை வளர்பனங் காடைகுலன்
 அருள்முத்துக் காங்கயன்சொல்

செழுமலர்ப் புயனான பொன்கவுண் டயனுக்குச்
 செம்பொன்முடி சூட்டுநாளில்
சேவயம் பதிஅரசு சோழரா சேந்திரன்
 சேவணையில் குமரசாமி
நனிமிகு கொங்காறு நாட்டினில் கந்தர்புரி
 நாதர்முரு கீசர்முன்பாய்
நாட்டிலுயர் சிவசுப்ர மன்னியகுரு தேசிகன்
 நாட்டிவைத் தருள்பட்டமே!

## பொன்னையன் காதல்

பொன்னையன் காதல் என்னும் இலக்கியத்தில் எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்துத் தலைவர்கள் சிறப்பு அடைமொழிகளால் புகழப்படுகின்றனர்.

'கங்கைகுல எழுமாத்தூர்க் காராளன்'
'எழுமாதை நகர்க்கதிபர் இரவலர்சேர் பனங்காடை
வழுவாத கீர்த்திபெற்ற மன்னர்'
'பொன்புகழ்சேர் எழுமாதைப் புண்ணியன்
பொன்னையன்'

'மாநதிசேர் எழுமாத்தூர் மகராசன் பொன்னையன்'
'பனங்காடை குலநேயன் பாக்கியவான் பொன்னையன்'
'செந்தமிழ்சேர் நல்லூர் செகராசன் பொன்னையவேள்'
'வேதியர்க்கும் இராசருக்கும் விளங்கும் வசியருக்கும்
சாதி அனைவோர்க்கும் சகாய புருஷன்'
'ஓதுபுகழ் நல்லூர் உற்றபனங் காடைகுலன்'
'வேந்தன் எழுமாதை விளங்குபனங் காடைகுலன்'

## கொடு மணல் இலக்கியம்

கொடுமணல் தம்பிராட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் ஏடுகளில் சில குலங்கள் பற்றிய பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று பனங்காடை குலத்தாரின் பல பெருமைகளைத் தொகுத்துத் தருகிறது.

### பனங்காடை குடிச்சிறப்பு

திருவுலவு செய் அண்ட பகிரண்ட நவகண்ட
செயமுமுது மேருலுங்கச்
செம்பொன்மலை கிடுகிடென இறையோனை உமாதேவி
சிக்கெனத் தான்பிடிக்க

திரள்கொண்ட இமையோர்கள் நடுநடுங் கிடஆதி
சேடன்நெற் றியிமையுளே
திறமான அசுரர்பொடி தவிடுபட மரகதன்
சீர்கண்ண விருந்தாடியே

மருவுலவு சிங்கார நடனமிட் டாடிவரும்
மயில்வா கனச்சேவுகர்
மனமுலவு இறுகமத புனுகுபரி மளகளபம்
திமிர்ந்தொழுகி யேவிம்மியே
வார்கொண்டு அண்ணாந்து மேகொண் டெழுந்து
முலைவல்லிக் குஞ்சரமணாளன்
மறையோனை முனிவுகொண் டொருநாறு சிரசு
வண்கையால் குட்டுமுருகா

அருள்பரவு அம்புவி இனிதான கொடுமணல்
அத்தனூர் அம்மனிருதாள்
அகமதனில் இனிதுட னேயிர வும்பகலும்
அர்ச்சனைசெய் தேதுதிப்போம்
ஆதிநாள் ஒருநா வலர்க்கு அரவின் வாய்மணி
அங்கையால் வாங்கியீந்தோம்
அமரர்மனம் மகிழவே முளைவாரி அமுதிட்டு
அதிகபுக ழேகொண்டவன்

திருவுலவு அடகின்மிசை வருகின்ற நீலிபழி
தான்கொடுத் தேஉயர்ந்தவன்
குபேரன் சதுர்உள்ள பனங்காடை குலதிலகன்
கெம்பீரன் சற்குணஉதாரன்
சதஙசு வரமூர்த்தி நற்றவம் தன்னில்வரு
மகிமை மைந்தன்
தகவுடைய பொன்னையன் மகிபன் கிருபை
தந்துகை தாக்க என்றே!

வங்காரத் தென்தெற்கு வானவரைக் கைதொழுது
சிங்கார வித்தெடுத்துச் செய்யும் பயிர்க்கதிபன்

வேடன் அருந்தாமல் வேணுமென்று நல்லதெல்லாம்
ஆடரவம் பூண்ட அரனுக்குத் தந்ததுபோல்

தேக்கினங்கள் உண்ணாமல் தேடும் பொருளைஎலாம்
காக்க வரம்அருளும் கர்த்தனுக்குத் தந்ததுபோல்

தீபமணி மார்பன் செகராசர் தங்களுக்கு
தாபவிடாய் தீர்க்கத் தருவார் திரவியத்தை

## பனங்காடர் ஊர்ச் சிறப்பு

*எழுமாத்தூர் பனங்காடை குலத்தினர் பரவியுள்ள ஊர்கள் சிலவற்றை ஒரு பாடல் சிறப்பிக்கிறது.*

குலஞ்சிறந்த காராளன் குவளையணி மார்பன்
நலஞ்சிறந்த வீர சோழபுர நாடதிபன்

வெத்திதரும் வேதகிரி விளங்கும் சிவகிரியும்
பத்திதரும் சிரகிரியைப் படைத்த மகராசன்

கார்மேகம் நீர்மேகம் கருணை மழைமேகம்
பார்மீதில் தேடிவரும் பண்புகொடு மணலூரான்

பொன்மாரி பூமாரி பொழியும் மழைமாரி
நன்மாரி தேடிவரும் நானிலத்தின் நல்லூரான்

## பனங்காடர் வாசல் வளம்

*புலவர்கள் வேளாளர்களின் வீட்டுக்கு வந்து அவர்கள் குடிச்சிறப்பையும், குலச்சிறப்பையும் பாடுவர். அவற்றில் வாசல் வளம் என்பது ஒன்று. அவற்றில் அன்னதானச்*

சிறப்பு, செல்வச் செழிப்பு, கொடை ஆகியன வெளிப்படும் எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாரின் வாசல் வளம் கீழ்வருமாறு புலவர்களால் பாடப்படுகிறது.

கண்டு மகிழ்ச்சியினால் கவிவாணர் தங்களுக்குக்
குண்டு மிளகியன்னம் கூர்ந்துதவும் வாசலினான்

தஞ்சமென்று வந்தவர்க்குத் தயவாய் மனதிரங்கி
மஞ்சள் மிளகியன்னம் மகிழ்ந்துதரு வாசலினான்

தெள்ளுதமிழ்க் கொடுமணலூர் தீரன்கந்த சாமிமன்னன்
வெள்ளை மிளகியன்னம் விளங்கிவரும் வாசலினான்

அத்திபரி ஒட்டகமும் அணிமுரசு வீரசின்னம்
சித்தர்மணிப் பொற்சிவிகை சிறந்திருக்கும் வாசலினான்

பாராளும் கொடுமணலூர் பண்புகந்த சாமிமன்னன்
காராளன் பொன்கலப்பை கட்டிவரும் வாசலினான்

## கட்டியக்காரன் கூற்று

எழுமாத்தூர்ப் பனங்காடை குலக் கந்தசாமிக் கவுண்டர் கொடுமணல் உள்ளிட்ட பகுதிகளை ஆட்சி செய்கிறார். அவர் வேட்டைக்கு வருவது எழுமாத்தூர் மலைக்குத்தான். அவர் வேட்டைமேற் செல்லும்போது கட்டியக்காரன் கூறும் புகழ்மொழியில் பனங்காடை குலத்தாரின் வரலாற்றுப் பெருமையும், பிற சிறந்த பண்புகளும் வெளிப்படுகின்றன.

பட்டாபி ராமா பனங்காடர் குலதிலகா
மட்டாரும் செங்குவளை மாலையணி மார்பழகா

முன்னாளில் புலவருக்கு முளைவாரி அமுதளிக்கும்
மன்னா பரிநகுலா வாகாம கோசரனே

அரவின் மணியெடுத்து அன்றுகவி ராசருக்குத்
திரவியம்போ லேகொடுக்கும் தீரா குபேரமன்னா

வேண்டியதெல் லாம்கொடுக்கும் விரும்பும் கவிஞருக்கு
பாண்டியனார் தாம்அறியப் பட்டயம் தந்தமன்னா

அலைகடல்சூழ் வையகத்தில் அன்று மனமகிழ்ந்து
புலையரைக் கூடவைத்துப் போசனம் செய்தமன்னா

உலகமெல்லாம் வாழ்வுபெற ஊற்றாணி தான்பூட்டி
விலகாமல் ஏர்நடத்தும் வெள்ளாளச் சாமிமன்னா

## அலகுமலைக் குறவஞ்சி

கொங்கு நாட்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்ற ஒரு நூல் ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி. பொங்கலூர் நாட்டின் புகழ்மிகும் ஓர் இலக்கியம். பொங்கலூர் நாட்டில் காணிகொண்டு சிறப்புடன் வாழும் குலத்தார்களைப் பற்றிய குறிப்பையும் அந்நூல் தருகிறது.

அலகுமலைக் குறத்தி சிங்கி குறிசொல்லிப் பெற்ற பரிசின் விபரத்தைச் சிங்கியிடம் சிங்கன் கேட்கிறான். சிங்கி கூறும் பதில் உரையில் சில இடங்களில் பனங்காடை குலம் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

அனங்கன் துதிக்கும் அலங்கார ரதியே—ஈரைந்து
கைக்கணை யாழிதந்தது ஆரடி சிங்கி?

பனங்காடை பொன்னயனும் பொருளந்தை காங்கேயனும்
பரிந்து திருப்பையூரார் தந்தது சிங்கா.

உல்லாசக் காரியுந்தன் உச்சிச் சிகரமதில்
உயர்ந்த வச்சிரக்குப்பி ஏதடி சிங்கி?

நல்லூர் அழுக்கயம் பொருளந்தை பனங்காடை
நல்லையன் மல்லையன் தந்தது சிங்கா.

பண்ணூப் பதித்த கும்பத் தனத்தாளே இந்திரவர்ணப்
பட்டுச் சேலை தந்தது யாரடி சிங்கி?

மண்ணறைச் சாந்தந்தை பொருளந்தை பனங்காடை
மந்திரி முத்துமன் தந்த வரிசைகாண் சிங்கா.

மாற்று யர்ந்திடு மாணடி யேற்ற பீதாம்பரமும்
வரிசை கொடுத்த தெந்தத் துரைசொல்லு சிங்கி?

ஊற்றலூர்ப் பனங்காடை குலத்தில் ஈஸ்வரமூர்த்தி
உகந்து கொடுத்த வரிசைகாண் சிங்கா.

## கொங்கு ஆவணங்களில் பனங்காடைகுலம்

கொங்கு நாட்டில் ஏற்பட்ட பல சமுதாய ஒப்பந்தங்களில் பனங்காடை குலத்தினர் குறிப்பாக எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தினர் முன்னிலை வகித்திருக்கின்றனர். சில ஒப்பந்தங்கள் உருவாகக் காரணமாக இருந்துள்ளனர். சில ஒப்பந்தங்களில் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

### பருத்திப்பள்ளி செல்லகுலப் பட்டயம்

கொங்கு நாட்டுச் செல்லகுலப் பெருமக்கள் ஒரு சமயம் பருத்திப்பள்ளியில் ஒன்றாகக் கூடினர்.

அவ்வாறு கூடிய செல்லகுலத்தார் தங்கள் சமயம் தொடர்பான காரியங்களுக்காக ஆடல்மகள் ஒருத்தியை நியமனம் செய்தனர். அப் பெண்ணுக்குச் 'செல்லகுல மாணிக்கி' என்று பெயரிட்டனர்.

அம் மாணிக்கி நியமனப் பட்டயத்தில் பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் கொன்னையாத்தில் பனங்காடரில் பெரிச்சிக் கவுண்டர் மகன் சின்னப்பெரிச்சிக் கவுண்டர் என்பவர்.

### கத்தாங்கண்ணிப் பட்டயம்

கத்தாங்கண்ணிக் காணியாளர்களில் சிவந்தி குலத்தைச் சேர்ந்த தீத்தாக் கவுண்டர் என்பவர் ஒருவர். அவர் வீட்டில் ஒரு பெண் பிள்ளை வெள்ளையாகப் பிறந்திருந்தது. அப் பெண்ணை யாரும் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை.

தம் பெண்ணை மணப்போருக்குத் தம் காணியாட்சி யான கத்தாங்கண்ணியில் சரிபங்கு காணி அளிக்கிறேன் என்று அறிவித்தார். கண்ணன் குலத்து இளைஞன் ஒருவன் சிவந்திகுலத் தீத்தாக் கவுண்டரின் வெள்ளைப் பெண்ணை மணக்க முன்வந்தான். அவனுக்குக் கத்தாங் கண்ணியில் சரிபங்குக் காணி அளிக்கப்பட்டது. இன்றும் கத்தாங்கண்ணிக் காணியாளர்களாகச் சிவந்தி குலத் தாருடன் கண்ணன் குலத்தாரும் காணியாளர்களாக உள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தில் திருப்பூர்ப் பனங்காடை குலத்து முத்துராசாக் கவுண்டர் உள்ளிட்ட பலர் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

## கொங்குப் புலவர் பட்டயம்

கொங்கு நாட்டு வேளாண் பெருமக்கள் தமிழ்ப் புலவர்கட்குத் தங்கள் வாழ்வில் மிக முக்கியம் அளித்தனர். கொங்கு 24 நாடுகட்கும் 24 பெரும் புலவர்களை நாட்டுப் புலவர்களாக நியமனம் செய்தனர். சோழர் ஆட்சியின் போது இந்நியமனம் நடைபெற்றது.

இடைக்காலத்தில் இவ்வழக்கம் நின்றுவிட்டது. விசயநகர அரசுக் காலத்தில் பழைய ஆவணங்களைப் பார்த்து மீண்டும் புலவர்கள் நியமனம் பெற்றனர். கொங்கு வேளாண் பெருமக்கள் பலர் இதில் கையொப்பம் இட்டுள்ளனர் அவர்களில் ஒருவர் பனங்காடை குலத்தில் தோன்றிய சோழியாண்டாக் கவுண்டர் என்பவர் ஆவார்.

## குறுப்பு நாட்டுப் பட்டயம்

எழுமாத்தூர் பனங்காடை குலத்தார் குடியேற்றத் தில் குறுப்பு நாடு மிகவும் சிறப்பான இடம் பெறுகிறது.

குறுப்பு நாட்டு 32 ஊர்களிலும் பனங்காடை குலத்தார் குறிப்பாக எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தார் பரவி வாழ்ந்தனர்.

'தென்குறுப்பு வீரசோழபுர வளநாடு சேத்தி குறுப்புநாடு 32 கிராமத்துக்கும் முதல்வராகிய பூந்துறை நாடு எழுமாத்தூரில் பனங்காடை குலத்தில் ஆண்ட ராசாக்கவுண்டர் குமாரன் சோழியாண்டாக் கவுண்டர்.'

'இந்தக் குறுப்பு நாட்டுக்கு 32 கிராமத்துக்கும் முதல் விசயமங்கலம் அதுக்கு முதல்வனாகிய தென் திசை வேளாளக் கவுண்டர்கள் பனங்காடை குலத்தில் சோழியாண்டாக் கவுண்டர்.'

- என்பன அப்பட்டயத் தொடர்களாகும்.

கதித்த மலையில் முதல் உரிமை பூந்துறை நாடு எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாருக்கே உரியது. இதனை,

'கதித்தமலை ஆண்டவருக்குத் தேரும் திருநாளுக்கு முந்தின விபூதி பிரசாதம் சோழியாண்டாக் கவுண்டருக்கு' என்று அப்பட்டயம் கூறுகிறது.

இப்பட்டயத்திற்கு குறுப்புநாட்டுக்காரர்களாகிய பிற குலத்தாரும், கொங்கு நாட்டுப் பட்டக்காரர்களும் ஒப்புக் கொண்டு சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

## காடையூர்ப் பட்டயம்

கொடுமணல், அமுக்கயம், கத்தாங்கண்ணி, திருப்பூர் ஆகிய ஊர்ப் பகுதிகளில் வாழும் கொங்கு வேளாண் பெருமக்கள் வேட்டுவ நாவிதனைநீக்கி வேளாண் நாவிதன் ஒருவரை வைத்துக் கொண்டதை விரிவாகக் காடையூர்ப் பட்டயம் கூறுகிறது.

அப்பட்டயத்தில் கொடுமணல் காணியாளர்கள் உள்ளிட்ட பலர் கையொப்பமிட்டுள்ளனர். கொடுமணல் பனங்காடை குலத்தில் நெட்டராசாக் கவுண்டர் என்பவர் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளார்.

## கொடுமணல் கல்வெட்டுக்கள்

தொல்பொருள் சிறப்புடைய கொடுமணலில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று அங்கு ஊர் நடுவில் உள்ள இராமசாமி கோயில் சீரங்கராமர் என்றும் இராமர் அழைக்கப்படுகிறார்.

அக்கோயில் சாத்தந்தை குலத்தாருக்கு உரியது. கொடுமணல் அருகில் உள்ள மொசக்குத்திப் பாளையம் சாத்தந்தை குலத்தார் அக்கோயிலுக்கு உரியவர்கள்.

அக் கோயில் தூண் ஒன்றைக் கொடுமணல் பனங்காடை குலத்து கயிலாசக்கவுண்டர் மக்கள் முத்துக் கவுண்டரும், வெள்ளைக் கவுண்டரும் கொடையாக அளித்துள்ளனர். இதை அத்தூண் கல்வெட்டுக் கூறுகிறது.

கொடுமணல் கிராம தேவதை கோயில்களில் ஒன்று அத்தனூர் அம்மன் கோயில். கொடுமணலுக்குக் கிழக்கே உள்ள பழங்கோயில். அக்கோயில் கதவில் ஓர் எழுத்துப் பொறிப்பு உள்ளது.

> 'ஸ்ரீ நந்தன வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் தேதி கொடுமணல் காணியாழர்களில் பாண்டியன், சேரன், பனங்காடை உபயம். ஆன்மக் கொல்லன்'

என்ற அப்பொறிப்பின் மூலம் கொடுமணலில் உள்ள பிற காணியாளர்களோடு பனங்காடை குலத்தார் இணைந்து சமயப் பணியாற்றியது தெரிகிறது. அக்கதவு அமைக்கும் பணியைச் செய்தவன் ஆன்மக் கொல்லன் போலும்.

# புலவரைப் போற்றல்

கொங்கு வேளாண் பெருமக்கள் வாழ்க்கையோடு புலவர்கள் மிகவும் தொடர்பு கொண்டவர்கள். கொங்குப் புலவர்கள் சோழ அரசன் காலத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானின் வாரிசுகளாகக் கொங்கு நாட்டில் நியமனம் செய்யப்பட்டனர்.

அரசனுக்குக் கொடுக்க வேண்டிய 'மாடை அரைக் கழஞ்சு' வதுவைவரி எனப்படும் திருமண வரியைக் கொங்கு வேளாளர்கள் கம்பர் பெருமானுக்குக் கொடுப்பதாகக் கருதிக் கொங்குப் புலவருக்குத் தந்தனர்.

கொங்கு வேளாளர் திருமணங்களில் திருமாங்கல்யம் நாண்பூட்டி முடிந்தவுடன் மங்கலன் என்று பெயர் பெற்ற நாவிதர்குலப் பெருமக்கள் கம்பர் சொன்ன மங்கல வாழ்த்தை அதற்குரிய இசையுடன் அழகாகப் பாடுவர். அதற்குப் பின்னர் கம்பர் வாழி, ஏரெழுபது, திருக்கை வழக்கம் எனக் கம்பர் பாடிய பிரபந்தங்களைப் புலவர் அவையில் படிப்பர். இவை மூன்று இலக்கியங்களும் கம்பர் பெருமான் பாடியவை. பின் மணமகன், மணமகள் வீட்டாருக்குரிய குலக்காணிப் பாடல், அவர்கள் நாட்டைச் சிறப்பிக்கும் பாடல், வாசல்வளம், வேளாளர் புகழ் முதலியவைகளைப் புலவர் பாடுவார். இவையெல்லாம் இப்போது அருகி இல்லாமலே போய்விட்டது; மங்கல வாழ்த்து மட்டும் சுருக்கமாகப் பாடப்படுகிறது.

திருமண வரி பெற்ற புலவன் மூன்று வேட்டிகள் அன்பளிப்பாகப் பெறுவான். தலைக்கும், தோளுக்கும், இடுப்புக்குமாக அவற்றை அணிவான். வயிறாரப் பந்தியில்

உணவுண்ட பின் திருமண வீட்டார் உண்ணும் வெண்கல வட்டிலில் பாலும் பழமும் நிறைய இட்டுச் சாப்பிடுவர். இச் சடங்கோடுதான் முன்பு கொங்கு வேளாளர் திருமணங்கள் முடிவுற்றன. புலவர் பால் பழம் சாப்பிடாத வீடுகள் முன்பு இழிந்த வீடுகளாகக் கருதப்பட்டன. அவர்கள் சமுதாயத்தில் தாழ்ந்தவர்களாகக் கருதப்பெறுவர்.

கொங்கு வேளாளர்கள் களத்தில் தானியம் அடிக்கும் போது வீட்டுக்குக்கூட கொண்டுவராமல் அங்கேயே புலவர்கட்குக் 'கொங்குக் கூடையால்' அளப்பர். அரசர் கொடுத்த அளப்பரிய செல்வத்தைவிடக் கொங்கு வேளாண் பெருமக்கள் கொடுத்த இத் தானியத்தையே புலவர்கள் பெரிதாக மதிப்பர்.

'மேடையால் மாளிகையால் விளங்குமுடி
மன்னரெல்லாம்
ஆடைகயால் சேர்சனத்தால் ஆரதிர்ந்து விட்டாலும்
தேடரியப் புகழ்படைத்த சிறப்புடைய காராளர்
கூடையினால் மொண்டெடுத்துக் கொடுத்தகம்புக்கு
ஒவ்வாதே'

என்பது ஒரு புலவர் பாட்டு.

கொங்கு வேளாளர்கள் தமிழ்ப் புலவர்கட்கு அடிமை ஓலை எழுதித் தந்தனர்; பல்லக்குச் சுமந்தனர்; எச்சில் காளாஞ்சி ஏந்தினர்; புலவர்கள் செருப்புகளைத் தலை மேல் வைத்துச் சுமந்தனர்.

புலவர்களும் நன்றிக்கடனாகக் கொண்டு வேளாண் பெருமக்களிடம் வலக்கையை ஏந்திப் பரிசில் பெற்றனர். மற்றவர்கள் பேரரசர்களாக இருந்தாலும் தம்முடைய இடக்கையையே நீட்டிப் பரிசில் பெற்றனர்.

கொங்குநாட்டுப் புலவர்களாகச் செங்குந்தர், அகம்படியர், சோழியர், சேரர், உவச்சர் ஆகியோர் விளங்கினர்

கொங்கு வேளாளரின் மங்கலச் சடங்குகள் புலவரை முன் நடக்கச் செய்து அதற்குப் பின்னரே நடந்தது.

'பட்டன் புலவன் பண்பாடி தக்கையன்
திட்டமாய்ச் சோபனம் செப்பிமுன்னே வர'

சடங்குகள் நடைபெற்றதாக மங்கல வாழ்த்து அறிவிக்கும்.

பனங்காடை குலத்தார் அனைவரும் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கொன்னையாற்றில் கூடித் தங்களுக் கென்று தனியாகப் புலவர்களை நியமித்துக் கொண்டனர். கொன்னையாற்றுப் புலவருக்குப் 'பனங்காடை மெச்சன்' என்று பெயரிட்டனர். பனங்காடை மெச்சனுக்கு நில மானியம் கொடுத்துச் சிறப்புக்கள் செய்தனர். இது வேறு குலத்தார்க்குஇல்லாத சிறப்பாகும்.

இது போன்று குலத்திற்கென்றே புலவர்களை வைத்துக் கொள்ளுதல் மிக அரிதான செயலாகும். நாட்டுக்கும், ஊர்களுக்கும் தனித்தனிப் புலவர்களைக் காணுகின்றோம். பனங்காடை குலத்தினர் போலப் பொருளந்தை குலத்ினரும் தங்கள் குலத்திற்கென்று புலவர்களை வைத்துக் கொண்டனர். கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கருமாபுரத்தில் 'பொருளந்தை குல மெச்சன்' என்ற புலவன் நியமிக்கப்பட்டதைக் கருமாபுரம் செப்பேடு கூறுகிறது.

முற்காலத்தில் புலவர்கள் எழுமாத்தூர்ப் பனங்காடை குலப் பெருமக்கள் வீடுகட்கு வருகை புரிந்ததையும், பரிசு கள் பல பாங்குடன் பெற்றதையும், வெண்கல வட்டிலில் நிறையப் பாலும் பழமும் இட்டு மகிழ்ந்து உண்டு வாழ்த்திச் சென்றதையும் நன்கு நினைவுகூர்கின்றனர். படிப்படியாக இவ்வழக்கம் குறைந்து இப்போது இல்லா மலே போய்விட்டது.

# குல குருக்கள்

சைவம் சிறந்த கொங்கு நாட்டில் வாழும் கொங்கு வேளாண் குலப் பெருமக்கள் பலரும் தங்களுக்கென்று தனித்தனியாகக் குலகுருக்களை நியமித்துக் கொண்டு பலர் தீட்சை பெற்றுச் சைவசமயச் சிறப்புடன் நலமாக எல்லாப் பேறுகளும் பெற்று வாழ்ந்தனர். குலகுருக்களும் சைவம் பேணி, ஆலயங்களைக் காத்துத் திருமடம் அமைத்து அடியார்களாகிய கொங்கு வேளாளர்களைச் சிறப்புடன் தம் ஆசியால் சீர்பெற வாழுமாறு செய்தனர்.

கொங்கு நாட்டில் முதலில் குடியேறிய வேளாண்குலப் பெருமக்கள் 'தம் குலகுருவுடன் வந்தனர்' என்பதைப் பட்டயங்கள் கூறுகின்றன. 24 நாடுகள் பிரித்து நாட்டுக்கு ஒரு குலகுருவாக 24 பேரை முதலில் நியமித்தனர் என்று ஒரு பட்டயம் கூறுகின்றது. பின் குடிபெருகக் குலகுருக்களும் பெருகினர்.

சோழர்கள் கொங்கு நாட்டைக் கைப்பற்றி அதிகாரம் செலுத்தும்போது சோழ நாட்டிலிருந்து சிறப்பான ஆதிசைவர்களைக் கொங்கு நாட்டுக்கு அழைத்து வந்தனர் என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

'குலசே கரன்குலோத் துங்கசீர்ச் சோழர்கள்
கொங்கினிடை
தலபூசை நன்குறத் தன்னாட்டு ளாரில் சமர்த்தர்கண்டு
நிலையான காணியும் மேன்மையும் ஈய நிதானமுறு
வலஆதி சைவர்கள் வாழ்வதன் றோகொங்கு
மண்டலமே'

என்ற கொங்கு மண்டல சதகப் பாட்டுமூலம் அதனை அறியலாம். ஒருசில செப்பேடுகள் சோழநாட்டுத் திருக்கடையூரிலிருந்து குலகுருக்கள் வந்ததாகக் கூறுகிறது. சில குருக்கள் காஞ்சிபுரத்திலிருந்தும், சிலர் சிதம்பரத்திலிருந்தும் வந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன.

'காரணிக மானவள வன்கலி யுகத்தினில்
கட்செவி மலைப்பரமனைக்
கந்தனை வணங்கிமக பூசையுண் டாக்கினன்
கைலாச நாதசிவனைத்
தாரணி புகழ்ந்திடத் தாபித்த னன்பெரிய
தண்கூப மதுகண்டனன்
சைவமறை யோர்பூச னைக்கினிய ராகவே
தனதுமண் டலம்மேவியே
சீரணிசீ காழியர்ஆ லம்பாயர் காசிபர்
திறந்தோடர்ச் சனைசெய்யவே
திதமுற அமைத்தனன் மநுநீதி முறைகண்ட
செம்பியன் பெற்றபெருமை'

என்பதைப் பாடல் மூலம் அறியலாம். இவருள் ஒருவரான காசிபர்குலக் குருக்களே எழுமாத்தூரில் தானிகராக இன்றும் சிறப்புடன் உள்ளனர்.

கொங்கு வேளாளர்கட்குக் குலகுருக்கள் இருந்தனர் என்பதைப் பல செப்பேடு பட்டயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

'கந்தமாபுரிப் பட்டணம்அதிலுள்ள பதினெண்குடிகள் இந்தத் திருமுருகன்பூண்டி ஆதீனத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்துக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்' என்பது ஒரு எடுத்துக்காட்டாகும்.

கொங்கு வேளாளர்கள் குல குருக்களை எவ்வாறு மதித்துப் போற்றினர் என்பதைக் கொங்குநாட்டுச் செப்பேடு ஒன்று பின்வருமாறு விளக்குகிறது.

'நாங்கள் யெந்த நாட்டிலே யெந்த ஊரிலேயிருந்தாலும் எங்கள் கோத்திரத்தார் தலைக்கட்டு ஒன்றுக்கு நாகரம் பணம் அஞ்சு வருஷப்பிரதியும் குடுத்துக் குருக்கள் சஞ்சாரம் வந்தபோது சஞ்சாரக் காணிக்கையும் அப்பணைப் படிக்கி உபதேசம் பாதபூசை முதலானதும் பண்ணிக் கொண்டு எங்கள் வமுசத்தார் புத்திர பவுத்திர பாரம்பரியமாயி பாதபூசை பண்ணிக் கொண்டு சன்னிதானத்திலே தீட்சை மகாமந்திர உபதேசம் பண்ணிக் கொண்டு சுவாமியார் தெண்டிணை கண்டிணை ஆணை ஆக்கிணை அபராதத்துக்குட்பட்டு நடந்து கொண்டு வருவோமாகவும்.

எங்கள் கோத்திரத்தார் எந்த நாட்டிலே எந்த ஊரிலே காணி வாங்கி அதிகாரம் பண்ணினாலும், குடித்தனம் செய்தாலும் சுவாமியார் பாதத்துக்குப் பணிந்து நடந்து கொள்ளுவோமாகவும். இப்படி நடந்துவரும் காலத்தில் இதுக்கு விகாதம் செய்யாமல், சொல்லாமல் பரிபாலினமாயி எங்கள் வமுசத்தார் பயபக்தியாய் நடந்து வந்தவன் சுகமாயி தன சம்பத்தும், தானிய சம்பத்தும் அஷ்டைஸ்வரியமும் ஆயுளாரோக்கியமும் தேவப்பிரசாதமும் குருப்பிரசாதமும் மேன்மேலும் உண்டாகி கல்லும் காவேரிப் புல்லும் பூமியும் சந்திராதித்தாள் உள்ளவரைக்கும் சுகமாயிருப்பார்கள்'

உடல் பொருள் ஆவி மூன்றையும் குலகுருவுக்கே தத்தம் செய்து கொங்கு வேளாளர்கள் பட்டயம் எழுதித்

தந்தனர். வாரிசு இல்லாத சொத்து குருவுக்கே என்று சிலர் கூறினர். 'குருவே சிவம்' என்று திருமந்திரம் கூறிய சிறந்தவழியில் கொங்கு வேளாண் பெருமக்கள் நடந்து வந்தனர்.

குருக்கள்புரம், குருக்கள்பாளையம், தம்பிரான்வலசு போன்ற ஊர்கள் குருக்களுக்குத் தனி ஊர்ப்பகுதிகளைக் கொடையாக விட்டு அவர்களுக்கென்றே தனி ஊர்கள் ஏற்பட்டதைக் குறிக்கும்.

எழுமாத்தூர்ச் சிவாலயத்திலும், மலைக்கோயிலிலும் காசிப கோத்திரத்துச் சிவாச்சாரியார்கள் சிறப்புடன் பூசை செய்து வருகின்றனர்

## பாசூர் அகிலாண்ட தீட்சிதர்

விருப்பாட்சிபுரம் என்ற பேரோட்டை ஆதி ஊராகக் கொண்டவர்கள் ஞானசிவாச்சாரியார் இம்முடிஅகிலாண்ட தீட்சிதர் அவர்கள். பின்னர் பாசூர் சென்று மடம் அமைத்து வாழ்ந்து இப்போது திருவானைக்காவில் மடம் அமைத்துச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களைப் பூந்துறை நாட்டவர்கள் குல குருவாக ஏற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்த செப்பேட்டில் எழுமாத்தூர், ஊராட்சிக்கோட்டை பனங்காடை குலத்தார் கையெழுத்திட்டுள்ளனர். அச்செப்பேட்டில் கொமார சின்னய கவுண்டர், நல்லய கவுண்டர், அவிநாசிக் கவுண்டர், முத்துராம கவுண்டர், செங்காளிக் கவுண்டர், பொங்காளிக் கவுண்டர், காளியப்ப கவுண்டர், குப்பக் கவுண்டர் முதலிய எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாரும், அர்த்தநாரிக் கவுண்டர், பழனிக் கவுண்டர் முதலிய ஊராட்சிக் கோட்டைப் பனங்காடை குலத்தாரும் கையொப்பமிட்டுள்ளனர்.

அண்மைக் காலம்வரை பாரூர் தீட்சிதர்கள் தம் சஞ்சாரத்தில் எழுமாத்தூர் வந்து சில நாட்கள் தங்கிப் பூசை செய்து பாதகாணிக்கை பெற்று அருள்பாலித்த நிகழ்ச்சிகளை எழுமாத்தூர்ப் பனங்காடைகுலப் பெரு மக்கள் தம் பசுமையான நினைவைக் கூறுகின்றனர்.

## திருமுருகன்பூண்டிக் குருக்கள்

பனங்காடை குலத்தார் பல ஊர்களைக் கொங்கு நாட்டில் காணியாகப் பெற்றனர். எருத்துப் பொதி மீது பணத்தைப் போட்டுக் கொண்டு சென்று பல ஊர்களை விலைக்கு வாங்கினார்கள். அவ்வாறு சென்றவர்களில் திருமுருகன்பூண்டிப் பகுதிக்குச் சென்றவர்கள் திருமுருகன் பூண்டி காசிப கோத்திரம் மார்க்கண்டேய ஆண்ட சிவசுப்பிரமணியக் குருக்களைக் குல குருவாகக் கொண்டு பணிந்து வணங்கி வந்தனர். இக் குருக்கள் காசிக்குப் போய்வந்தவர்கள் என்று பட்டயம் கூறும். திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனத்தில் இவ்விபரம் கூறப்படுகிறது.

## கீரனூர்க் குருக்கள்

பனங்காடைகுலத்தார் எழுமாத்தூரிலிருந்து கொடு மணல் பகுதிக்குக் குடியேறினாலும் பாரூர் அகிலாண்ட தீட்சிதரையே வணங்கி குலகுருவாகக் கொண்டு வணங்கி வந்தனர். அவர்கள் பிற்காலத்தில் சஞ்சாரம் வராத காரணத்தால் கொடுமணலில் குடியேறிய எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தார் கீரனூர் கொடுமுடிப் பண்டிதர் அவர்களைக் குல குருவாக ஏற்றனர்.

> 'குருமொழிக்குள் மெய்யான கொடுமுடிப் பண்டிதனார்
> தருபதத்தை எந்நாளும் தயவாய்ப் பணிந்து கொள்வோம்'

'கொங்குலகின் மிக்கான கொடுமணல் பனங்காடர்
குருசிலே தனுமாரனே
குருராயன் மலைய கொடுமுடிப் பண்டிதர்
கொடுத்தவெண் ணீறு புணையும்'

'ஓங்குபுகழ்க் கீரனூர் கொடுமுடிக் குருராயர்
அணி மகுட குரு மடாதிபதி'
'கொண்டுவந்து தான்கொடுத்துக் கொடுமுடிப்
பண்டிதனார்
பண்டுதவும் சேனாபதிப் பண்டிதனார் தாள்வணங்கி'

என்ற கொடுமணல் இலக்கிய வரிகள் கொடுமணல் பனங்காடை குலத்தாருக்கும் கீரனூர்க் கொடுமுடிப் பண்டிதருக்கும் உள்ள தொடர்பை நன்கு விளக்குகிறது

## கூனம்பட்டி ஆதீனம்

கூனம்பட்டியில் மாணிக்கவாசகர் பெயரில் தொன்மையான ஒரு திருமடம் உள்ளது. அம்மடத்தில் தலைவராக வருபவர்கள் ஒவ்வொருவரும் மாணிக்கவாசகர் பெயரைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொள்ளும் பெருமை படைத்தவர்கள். இப்போது கூனம்பட்டி ஆதீனத் தலைவராக எழுந்தருளியிருப்பவர்கள் தவத்திரு. இராச லிங்க மாணிக்கவாசக சுவாமிகள் ஆவார்கள்.

எழுமாத்தூர்ப் பனங்காடை குலத் தலைவர் இராம சாமிக் கவுண்டர் காதலில்,

'மண்டலத்தி லேவிசைய மங்கைநகர் மாணிக்கப்
பண்டிதராம் எங்கள்குரு பாதம் பணிவோமே'

என்ற தொடர் காணப்படுகிறது. கூனம்பட்டியில் மட்டுமின்றி மாணிக்கவாசகர் மடங்கள் முன்னர் அவிநாசியிலும், விசயமங்கலத்திலும் இருந்தன. பனங்காடை

குலத்தார் காணி ஊராகிய விசய மங்கலம் நாகீசர்கோயில் கல்வெட்டுக்கள் சிலவற்றில் கூனம்பட்டி ஆதீனகர்த்தர்கள் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர்.

## நாககிரி பண்டிதர்

எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாரின் திருச்செங்கோடு நந்தவனப் பட்டயத்தில் திருச்செங்கோடு நாககிரி பண்டிதர் என்பவர் குல குருவாகப் போற்றப்படுகிறார். இப்பட்டயத்தில் நமசிவாயச் சக்கரம் முதலில் எழுதப் பட்டிருப்பதும், பெரியபுராண வாழ்த்துப் பாடல் ஒன்று முதலில் எழுதப்பட்டிருப்பதும் எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாரின் சைவ சமய ஈடுபாட்டையும், பெருமையையும் நன்கு விளக்கிக் காட்டுகிறது.

## நல்லூர் சுப்பய்யக் குருக்கள்

பொன்குலுக்கி நாட்டு நல்லூரை விலைக்கு வாங்கிய ஆத்தூர்ப் பனங்காடை குலத்தினர் அங்குள்ள சுப்பய்யக் குருக்களைக் குருவாகக் கொண்டனர் என்று நல்லூர்க் கிரையப்பட்டயம் கூறுகிறது.

# எழுமாத்தூர் இலக்கியங்கள்

*இவை எழுமாத்தூர் வேலம்பாளையம் பெரும் தமிழறிஞர் அமரர் புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பாடியவை. எழுமாத்தூரின் புகழிற்குப் புகழ் சேர்த்த புலவர்மணியாகிய தெய்வசிகாமணிக் கவுண்டர் தம் மாதுர் பாட்டனார் க. கு. சின்னத்தம்பிக் கவுண்டர் அவர்கள் நினைவாக இந் நூல்களை **1943**இல் வெளியிட்டார். அவற்றுள் சில பாடல்களை இங்கு கொடுத்துள்ளோம்.*

## எழுமாத்தூர்ச் சத்திநாதர் சிவக்கொழுந்துமாலை

பூங்குமு தம்செண் பகம்முல்லை நீலம் பொலிகமலம்
கோங்குசெங் காந்தள் உறுங்காம வல்லிக் கொடிபடரப்
பாங்குஅமர் கற்பக தாருஎன் றேநினைப் பாடிநிற்பேன்
தேங்கம லத்துஎழு மாதையில் சத்திச் சிவக்கொழுந்தே. 1

ஆறு தரும்சடை அப்பாஉன் மேலோங் கருள்அதனால்
வீறு தரும்தெய்வ மெண்ணின்றி எங்கும் விளங்குகினும்
சோறு தருந்தெய்வம் நீயன்றி யார்உளர் தொல்மறைகள்
தேறு தரும்புக ழாய்எழு மாதைச் சிவக்கொழுந்தே. 2

சொற்கலை ஞானம்கொண்டு உன்கழல் ஏத்தித்
தொழுதல்இன்றி
அற்பரைத் தேடிப் பொருள்காணும் வேட்கைக்கு
அலைவதெல்லாம்
பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுதிடல் போலுமன்றோ
தெற்கெழுங் காற்றுத் தவழ்எழு மாதைச் சிவக்கொழுந்தே. 3

பூநின்ற நின்திருப் பாதாம் புயத்தில் புதுமலர் தூய்ப்
பாநின்ற மென்மொழி யார்எழு மாதர் பராவிநிற்க
வாநின்று ஒளிர்உருத் தந்தனை எற்கு வளர்கவிதைத்
தேநின்ற சொல்லரு ளாய்எழு மாதைச் சிவக்கொழுந்தே. 4

நானே விரும்பிவந்து உன்கழல் ஏத்தி நயந்திலன் நீ
தானே வலிந்துஎன்னை ஆண்டுகொண் டாய்இத்
*தராதலந்தான்*
வானே செயுமுத விக்குக்கைம் மாறு வழங்கல்உண்டோ
தேனே அருள்மழை யேஎழு மாதைச் சிவக்கொழுந்தே. 5

## எழுமாத்தூர்ச் சருவலோகநாயகியம்மன் ஒருபா ஒருபஃது

உலகம் புகழும் எழுமாதை ஞான ஒளிபரப்பி
இலகும் கருணை செயும்சர்வ லோகத்து இறைவிநின்றாள்
நிலவு மனம்தந்து அடியேனைக் காத்தருள் நின்புகழ்ச்சி
பலவும் எடுத்திசைத் தேபணி செய்குவன் பாரிடத்தே. 1

பார்தரு பொய்வாழ்வு எனும்எட்டி யில்கொண்ட பற்றைவிட்ட
சீர்தரு மாதவர் வேண்டும் கருணைச் செழுங்கரும்பே
ஆர்தரு வேணி அழகற்கு வாய்த்த அரும்குயிலே
நேர்தரக் கவிஎ னையாள வேண்டும்இந் நீள்நிலத்தே. 2

நிலத்தில் பிறந்தும் அறியாமை கொண்டும் நிதநிதம்சஞ்
சலத்தில் கிடந்து தளர்வேனுக் கும்ஒரு சார்புஉளதால்
வலத்தில் சிறக்கும் எழுமாதை ஈசன் மலைப்புயத்தில்
குலத்தில் சிறந்து படரும் பசுங்கொடிக் கோமளமே. 3

கோலம் செறியும் மலைமயி லேநின் குளிர்கருணை
மேலும் பெறமுயல் அன்பர்துன் புற்று மெலிவதுண்டோ

ஞாலம் படைக்கும் அயன்முதல் தேவர் நலிந்திடவும்
ஆலம் குடித்தும் சிவன்துயர் சற்றும் அடைந்திலனே. 4

அடைமொழி தேடிக் கவிபாடி அற்பரை ஆதரித்துக்
கடைவழி நின்றுஒரு காசும் பெறாது கலங்கிவந்தீர்
இடைவழிச் செம்பட்டு உமையாளைச் சேவித்து எளிதில்ஒரு
நடைமொழி யேனும் பகர்வீர் பெரும்செல்வ நல்குவனே. 5

## எழுமாத்தூர் மலை என வழங்குகின்ற கனகமலை வெண்பா

நாடெல்லாம் கொங்குவள நாடாமோ, நாட்டில்உள்ள
கோடெல்லாம் பொற்கனகக் கோடாமோ—சேடெல்லாம்
தங்கும்வேள் எங்குஅருளைத் தான்செயினும் இங்குசெயும்
பொங்கருள்ஒப் பாமோ புகல். 1

ஆறிரு தோளும் அறுமுகமும் வைவேலும்
மாறிகலைத் தேய்த்த வளர்கரங்கள்—ஆறுஇரண்டும்
ஏறு மயிலும் இணைஅடியும் ஏர்கனக
வீறுமலை யும்என்னுள் மேவு. 2

சேந்தா கனகமலைச் செவ்வேலா வள்ளிமகிழ்
காந்தா உனதருளைக் காதலித்துக்—காந்தம்
படித்துப் பொருளுரைத்துப் பார்மீது நாயேன்
பிடித்தத் துடன்வாழப் பேண். 3

கவ்வி மயில்கோபங் காட்டக் கனலென்று
கவ்வி மருள்கனக நன்மலையே—செவ்விதழி
ஆறு தலைப்பெம்மான் அன்பால் உவந்தஅளித்த
ஆறுதலைப் பெம்மான் அகம். 4

எனக்குஅழகு நின்புகழை ஏத்தல் இசைந்த
உனக்குஅழகுஉய் வித்தருளல் என்னைப்—புனத்துஎயினர்
கம்பு முயலடித்தல் கண்டும்தி அஞ்சிமிகப்
பும்புகன காசலச்செய் பூர். 5

# பனங்காடர் நந்தவனப் பட்டயம்

'பனங்காடர் குலத்து நந்ததனப் பட்டயம்' என்ற ஓலைச்சுவடி ஒன்று கிடைத்துள்ளது. கொங்கு நாட்டுத் தலைமைத் தலமாகிய கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருச்செங்கோட்டில் வைகாசித் திருத்தேரின்போது பனங்காடை குலத்துப் பெருமக்கள் ஒன்றாகக் கூடி நந்தவனம் ஏற்படுத்தியதை இந்தச் செப்பேடு குறிக்கிறது.

கி. பி. 1644 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி எழுதப்பட்ட பட்டயம். முதலில் நான்கு யுகங்களில் திருச்செங்கோடு பெற்ற பெயர் விளக்கப்படுகிறது. கிரேதா யுகத்தில் பிரமகிரி என்றும், திரேதா யுகத்தில் விஷ்ணுகிரி என்றும், துவாபரயுகத்தில் துர்க்கைகிரி என்றும் பெயர் பெற்ற இத் திருச்செங்கோடு கலியுகத்தில் நாககிரி என்று பெயர் பெற்றுள்ளது. தெட்சிண கைலாசம் என்று திருச்செங்கோடு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானின் பல பெயர்களும், சுப்பிரமணியக் கடவுளின் பற்பல பெயர்களும் கூறப்படுகின்றன. அமரர் சிறைமீட்ட அமராபதி காவலனான முருகன் ஞானசம்பந்தராக அவதரித்துச் சமணரை அழித்த விபரம் கூறப்படுகிறது.

குன்னத்தூரில் (சங்ககிரி மலை) நாயக்க அரசனின் பிரதிநிதியாக மருவராசா அய்யன் அவர்கள் ஆட்சிபுரியும் நாளில் இப்பட்டயம் எழுதப்பட்டது. தொடக்கத்தில் பெரியபுராண வாழ்த்துப்பாடல் ஒன்று உள்ளது.

பனங்காடை குலத்தாரின் பல்வேறு சிறப்புக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

சித்திரமேழித்துவசன், கொழுமுனை கொண்டு குவலயம் காத்தவன், முன்கையில் சந்தனம் உரைத்தவன், வளைவாரி அன்னமிட்டவன், ஆடைகீறிச் சிலந்தி காட்டினவன், அரவின் வாயில் கையிட்டவன், நீலி பழி சுமந்தவன், பாணன் பிணம் சுமந்தவன், சூலி முதுகில் அன்னமிட்டவன், குலம்காத்த பெரியோர், வடிதமிழ்க்கு அடிமையானவர், வாய்மொழி தவறாதவர், பூமி பாலகர், வன்மையுள்ளார்

என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்பட்ட பனங்காடை குலத்துமக்கள் 'தர்மமாத்துமாக்கள்' என்று அழைக்கப்படுகின்றனர்.

எழுமாத்தூர் (5), ஆனங்கூர் (4), கொன்னையாறு (6), காட்டுப்பாளையம் (1), கூத்தம்பூண்டி (4), அறச்சலூர் (1), ஆத்தூர் (1), கிழாம்பாடி (1), மொடக்குறிச்சி (1), மருதுறை (2), ஊராட்சிக்கோட்டை (2), பிரமியம் (1), மருக்காரம்பட்டி (1), கோனூர் (1), பொத்தனூர் (1), பட்டிலூர் (1), இராசாபாளையம் (1), கொடுமணல் (4), கூனவேலம்பட்டி (1) ஆகிய 19 இடங்களிலிருந்து 41 பனங்காடை குலப் பெருமக்கள் திருச்செங்கோட்டில் கூடினர். இவர்களில் ஐவர் எழுமாத்தூர்க்காரர்கள்.

திருச்செங்கோட்டில் கணக்குப்பிள்ளைகள், மணியகாரர், மடாதிபதிகள், மயேசுபரர் முன்னிலையில் நந்தவனம் அமைக்கப்பட்டது. பணிமலைக் காவலர் பூசாரியாகிய பழனிப் பூசாரி மகன் குழந்தைப் பூசாரிவசம் நந்தவனம் ஒப்படைக்கப்பட்டது. நந்தவனத்தில் பணி செய்ய வேண்டியது அவர் கடமை. அதற்காக 19 ஊர்ப்பனங்காடை குலத்தவர்களும் ஏருக்கு 3 வள்ளத் தானியம் (சுமார் 12 லிட்டர்) கொடுக்க ஒப்புக் கொண்டனர்,

எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தினர் திருச்செங்கோட்டில் நந்தவனம் அமைத்து மலரும், பசும்பாலும் திருச்செங்கோட்டுக் கோயிலுக்குக் கொடுத்துவந்தனர். திருச்செங்கோட்டுத் தேர்த்திருவிழாவில் இன்றும் ஐந்தாம் நாள் கட்டளையை எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தினர் செய்து வருவது சிறப்புக்குரியதாகும். எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தாருக்குத் தனி மடமும் திருச்செங்கோட்டில் அமைந்திருந்தது.

## மூலபாடம்

நமசிவாய—சிவயநம—வயநமசி—யனமசிவ—மசிவயந

பனங்காடர் குலத்தார் னந்தவனப் பட்டயம். எடுத்தவன் குடுக்கவும். யில்லாவிட்டால் நறகத்துக் கேதுவு.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சையிவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே உ

கண்டீசு பரன்கரும மாராய்தல்—பண்டே
அரஞ்செயிதா னறங்காத்தான் பாதம்
திறம்பாமன் சென்னியின்மேல் வைத்து

அருளாதி சண்டேசுபரன் அனுக்கிரகத்து திருவாய் மலந்தருளின்படிக் கிரேதா திரேதா துவாபுரா கலியுகா கிரேதா யுகத்துக்கு விறும்மா அர்ச்சிக்கையில் விறும்மகிரியு விரும்ம தீர்த்தமு விறுமீசுறருமானவர், திரேதாயுகற்றுக்கு விட்னு அர்ச்சினை பண்ணுகையில் விஷ்ட்னு கிரியும் விஷ்ட்டுனு தீர்த்தமும் விஷ்ட்டுனு யீசுரருமானவர், துவாபாரா யுகத்துக்கு துற்க்கை அர்ச்சினை பண்ணுகையில் துற்க்கை

கிரியும் துர்க்கை தீர்த்தமும் துர்க்கையீசுபறருமானவர், கலியுகத்துக்கு னாகம் அர்ச்சினை பண்ணுகையில் நாககிரியும் நாகதீர்த்தமு நாகயீசுரருமானவர்

இப்படி சதுர்யுகம் பூசை கொண்டருழிய சொஷ்தஸ்ரீ கயிலாசவாசன், கண்டீசுபரன், தேவதேவன், தெயிவசிகாமணி, தேவதிலோற்றமன், தேவதாசறுவபூமன், பத்திப்பிரியன், பற்றவற்ச்சலன், பார்பதி வல்லவன், பார்பதி மனோகரன், பார்பதிபிராண நாயகன் முத்திக்குவித்து, முக்கண்ணீசுபரன், நின்றகோல மழகிய நிமலன். நேற மொரு பஞ்சவற்னப் பிரகாசன், திருமுகவேறவன், தெண்டாயுத அஸ்த்தன் செம்புத் தீவிர்த் திராவிடை தேசற்றில் தொண்டமண்டலத்தில் காஞ்சிமாநகரில் திருக்கம்பையாற்றில் பார்பதா தேவியார் அற்த்தமாகம் பெற வேண்டி அரியதவசு பண்ணுகையில் அப்போது காஷ்சி கொடுத்தருழிய கொங்கு மண்டலத்தில் தெஷ்சன கைலாச மென்கிற ஸ்ரீநாககிறி பருவதத்தில் அற்த்த பாகங் கொண்டருழிய அற்த்தனாரீசுப்ற சுவாமியார் அவருடைய ஸ்ரீமத் குமாரனாகிய

சுப்பிறமன்னியற், சுறலோக தெஷ்சனர், விப்பிரப் பிரியன், விசுவமூற்த்தீச்சுவ்பாலன், சறவணபவன், சண்முகப்பிரதாபன், குக்குடத்துவசன், குங்கும வற்னன், கெவுரி திருமகன், கணபதி சகோதரன், தெயிவானை வள்ளி மனோகரன், தேவர் சிறை மீட்ட தேவசேனாபதி, அமறர் சிறை மீட்ட அமராபதி காவலன், பக்கறப் பகட்ட றக்கர் பட்டிடப் பதைக்களிறு கொக்கறித்த மறக்கழித்த குக்குடத் துவசன், சக்கற வட்டமிட்டு வெட்டித் தாவிச் சிரகாலடிக்கும் தோகைப் பிரதாபன், துரங்கன், சிஷ்ட்டிக் கும் விறும்மன், சிரசு திண்டாட குட்டிக் குடுமியை நெட்டை வாங்கி கோல விறுபம் பதங் கொடுத்த குமார

கொண்டீரவன், துஷ்ட்டச் சமணரை வெட்டிக் கழுமிசை வைத்த சுப்பிரமண்ணிய சுவாமியார் திருவிளப்படிக்கி,

வீரலஷ்சுமி, விசைய லஷ்சுமி, வாசுதேவருடைய காறியத்துக்கு கர்த்தராகிய குன்னத்தூரு மருவராசா அய்யர வற்கள் னாழில் கலியுக சகார்த்தம் நாலாயிரத்து யெளுனூற்று நாப்பத்தஞ்சுக்கு மேல் செல்லாநின்ற தாருண வருஷம் வையாசி மாசம் 9 தேதி ஆதித்த வாரமும் சதுர்த்தெதியும் விசாக நஷ்செத்திரமும் பெற்ற சுபயோக தினத்தில்,

வையகஞ் சூழ்ந்த கொங்கு மண்டலத்தில் சித்திர மேழித் துவசன், கொளுமிகுதி கொண்டு குவலையங் கார்த்த மண்டலாதீசுரன், மின் கையில்ச் சந்தனமுரைத்தவன், முளவாரி அன்னமிட்டவன், ஆடை கீரிச் சிலந்தி க(ா)ட்டினவன், அரவின் வாயில் கையிட்டவன், பண்டு வென்னீலி பளு கழுவில் வெண்ணவன், பாணன் பிணஞ் சுமந்தவன், பரிகாலம் சூலிதன் முதுகிலன்ன மிட்டவன், பண்டு குலங் காத்த பெரியோர், வண்டுலவு குவளையணி மாலையணி மார்பன், வடிதமிள்க் கடுமையானவன், வா(ய்)மொழி தவுராதவன், பூமி பாலகன்,

வன்மையுள்ளார் பனங்காடர் தற்ம்மாற்றுமாக்கள், யெளுமாத்தூரு குமாரசாமி கவுண்டன், தெயிவசிகாமணி கவுண்டன், அத்தப்ப கவுண்டர், வேம்பாண்டகவுண்டர், நாச்சியப்ப கவுண்டர், ஆனங்கூரு வேல கவுண்டர், செங்கோடகவுண்டர், ஆனந்தகவுண்டர், கொங்கலா கவுண்டர், தொன்னையாத்து பெரிய நல்லாக் கவுண்டர், பெரிய புள்ளிக் கவுண்டர், சின்னப்புள்ளிக் கவுண்டர், பெரிய பெரிச்சி கவுண்டர், தேவராடி மாரப்ப கவுண்டர், விருமாண்ட கவுண்டர், காட்டுபாளையம் வேல கவுண்டர், கூத்தம்பூண்டி பெரிய நல்லா கவுண்டர், புடாறப்பு

கவுண்டர், செல்லப்ப கவுண்டர், சாமிக் கவுண்டர், அரச் சலூறு சோழியப்ப கவுண்டர், ஆத்தூரு சோழியப்ப கவுண்டர், கிழாம்பாடிக் குமரசாமிக் கவுண்டர், முடக் குறிச்சி குமரசாமிக் கவுண்டர், மறுதுறை நல்லகுமர கவுண்டர், ஊராச்சிக் கோட்டை அத்தனாரிக் கவுண்டர், சின்னாக் கவுண்டர், பிரமியத்து வாரணவாசி கவுண்டர், மருக்காரம்பட்டி வேல கவுண்டர், கோனூர் குப்பிச்சி கவுண்டர், சோழியப்ப கவுண்டர், பொத்தனூர் கந்தப்ப கவுண்டர், பட்டுலூறு யிழைச்சி கவுண்டர், றாசா பாழை யம் வேலகவுண்டர், கொடுமணல் புடாரப்ப கவுண்டர், செல்லப்ப கவுண்டர், சாமி கவுண்டர், செல்லப்ப கவுண் டர், கூனவேலபட்டி அத்தனாரி கவுண்டர், ஆறுமுக கவுண்டர், ராமசாமி கவுண்டர்

இத்தண்டத்தாருங் கூடி திருச்செங்கோட்டுத் திருவிழாவுலே கூடிய மகாசனத்தில் தர்மம் பரிபாலினமாக கணக்கப்பிள்ளையள், மணியகாறர், மடாதிபதியள், மயேசுபறர்கள் இவர்கள் முன்பாக கல்லுங் காவேரி யுள்ளழவும் நந்தவன தற்மம் நடக்கவேணுமென்று பனங் காடர் சகலருங்கூடி பணிமலைக் காவலற் சுவாமியார் கோவில்ப் பூசாறிகழில் பழனிப் பூசாரி மகன் குளந்தைப் பூசாறிக்கி பட்டயங் கொடுத்தோம். இதுக்கு னந்தவான சம்பழம் யேறுக்கு மூணு வள்ளம் தாழ்வில்லாமல் குடுத்து நடத்திவறக் கடவேனாகவும்.

இந்த தற்ம்மத்தை தம்முடைய வங்குசத்தி யாதா மொருத்தற் வஷிக்சுக் கொண்டபேற்கள் புத்திரா பவுத் திரா பாரம்பறமாயி சந்திராதித்தற் உள்ளவரைக்கும் சாலோக சாமீப சாறுப சாயுச்சியப் பதமுண்டாய் திருச் செங்கோட்டு அற்த்தனாரீசுபற சுவாமியார் சிவ தீர்த் தத்தை முழுகின பலனும், பஞ்சவர்ன தெரிசினை

சேவித்த பலனும், சண்முக தீர்த்தத்தில் முழுகி கார்த்திகை நஷ்சேத்திரத்தில் சுப்பிரமன்னிய சுவாமியை சேவித்த பலனும், காசிக்குப் போயி விசுவனாதரையும் விசையாலாஷ்சி அம்மனையும் சேவித்த பலனும், காசி தீர்த்தம் கொண்டுபோய் ராமனாதருக்கு அபுடேகம் பண்ணின பலனும், சிதம்பறத்துக்குப் போய் சிதம்பரீசுபறரையும் சிவகாமி அம்மனையும் மாற்கழி மாசம் திருமஞ்சனத்தை சேவித்த பலனும், காஞ்சி புரத்துக்கு போய் காமாச்சி அம்மனையும் யேகாம்பற நாதரையும் நாலாந் திருநாழில் ரிஷப வாகனக் காச்சியை சேவித்த பலனும், மதிரைக்குப் போய் சொக்கநாத சுவாமியையும் மீனாஷ்சி அம்மன்னையும் ஆவணி மூல்த்திருநாழில் சேவித்த பலனும், அஷ்டா ஆசுபிரியமும் சம்பன்னருமாய் ஆருவேநாகவும்.

இந்த தர்ம்மத்தை அனீதம் பண்ணின பேற்கள் கெங்கைக்கரையிலே காறாம் பசுவைக் கொன்ன தோசத்திலே போவேணாகவும். மாதா பிதாவை கொன்ற தோஷத்திலே போகவும். குருவை நித்திச்ச தோசத்திலே போகவும். சிவஸ்ந் தலங்கழில் சிவாலையங்கழை இடித்த தோஷத்திலே போகவும். இந்த தர்ம்மத்தை பரிபாலினம் பண்ணி நடப்பித்த பேற்கழை அர்த்தனாறீசுபறசுவாமி யார் லஷ்சிப்பார். சுப்பிரமன்னியற் சுவாமியார் லஷ்சிப்பார். குருவு நாககிரி பண்டிதர் துணை. நமசிவாயமுந் துணை. திருச்சிற்றம்பலம்ந் துணை. பணிமலை காவலற் துணை.

இந்தப் பட்டயம் திருவாடுதுறை ஸ்ரீகருணரில் சுத்த ஞாணியாகிய கவுஷிய கோத்திரன் அக்கினியற் தானம் பண்ணி பணிமலைக் காவலருக்குப் பூசை கொண்டருழிய பளனிவேல் பூசாறிக்கி எழுதி குடுத்த நந்தவான தர்ம்ம சாதனப் பட்டயம் உ சிவாயநம உ மருவு ராசாஷைய்யுன வற்கள் நாழையில் யெழிதிய பட்டயம்,

# திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனம்

மதுரையில் சொக்கலிங்க நாயக்கர் ஆண்டு வரும் போது அவருடைய பிரதிநிதியாகத் திருமுருகன்பூண்டி, அவிநாசி, மங்கலம் முதலிய கொங்குப் பகுதிகளைப் பால வேளாளரில் பயிசலிய கோத்திரத்து வீர விக்கிரம சோழி யாண்டாக் கவுண்டர் நிர்வாகம் செலுத்தி வந்தார்.

வீர விக்கிரம சோழியாண்டாக்கவுண்டர் மதுரைக்குச் செலுத்த வேண்டிய வரியில் 24000 பொன் பாக்கி ஏற்பட்டு விட்டது. அதனை முழுவதையும் மூன்று நாட்களில் கட்டு மாறு அரசர் ஆணையிட்டார். இல்லாவிடில் கைது செய்து சேலூருக்குக் கடத்துமாறும் ஆணை பிறப்பித்தார்.

அப்போது எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்துப் பொய்யாக் கவுண்டன், மருதுறை ஆந்தை குலத்துச் செல்லப்பக் கவுண்டன், தொற்றனூர் ஆந்தை குலம் சரவணைக் கவுண்டர் மூவரும் ஆளுக்கு 5000 பொன் கொடுத்து வரி பாக்கியைக் கட்டுமாறு செய்தனர். மதுரை யிலிருந்த அச்சாரம் 9000 பொன் போக மீதி 15000 பொன் வரியும் கட்டப்பட்டது.

தனக்கு வந்த மாபெரும் ஆபத்தை நீக்கிய காரணத் தால் அம்மூவருக்கும் திருமுருகன்பூண்டி, அவிநாசி தேவஸ் தானங்களையும், திருமுருகன் பூண்டி ஊரையும் கிரையம் செய்து கொடுக்கிறார் வீர விக்கிரம சோழியாண்டாக் கவுண்டர்.

## மூலபாடம்

ஹரிஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

சிவமயம்.

ராமசெயம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ மன் கொன்டேறி ஆளுடைய நாயனார் திருவிள்ப்படிக்கு ஸ்ரீமன் மகாமண்டலேசுபரன் ஆரியதள விபாடன் ஆரியமோகந் தவிள்த்தான் ஒட்டிய தள விபாடன் ஒட்டியமோகம் தவிள்த்தான் ஆறிலொன்று கடமை கொண்டு அருள் பெரிகி அன்பு கூர்ந்து ஆதுர சாலையும் அந்தணர் வேள்வியும் வேதவொலியும் விளாவறா விதியும் தபோதன மடங்களும் தற்மசாலையும் பிச்சையில் முப்பத்திரண்டறமும் விளங்கிய மண்டலம் திரள்கொண்டருளிய ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசமனோபயங்கரன் கடல் கலங்கினும் காவேரி வ்த்திலும் மலை அலிங்கிலும் மனங்கலங்காத கண்டன் கண்டனாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் சொல்லுக்கு அருச் சந்திரன் அளகுக்கு அனங்கன் அறிவுக்கு அகஸ்த்தியன் பொறுமைக்கி தருமர் போருக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் சாஷ்த்திரத்துக்குச் சகாதேவன் அசுபதி கெஷபதி நரபதி தனபதியாகிய மதுரை ரற்றின சிம்மா சனத்துக்கு உடையவராகிய ராசாதிராச மகாராச ஸ்ரீமும் முடிப் பட்டத்து சொக்கலிங்க னாயக்கரவர்கள் ராச்சியம் பரிபாலினஞ் செய்கின்ற னாளையில் அவர்களுடைய காரியத்துக்குக் கற்த்தாவாகிய ஆறு நாட்டுக்குள் கொங் கேளு ஷ்தலத்தில் பிறுமத்தியுந் தீற்த்து அயிராவதத்துக்கு முத்தி கொடுத்தறுளிய சுந்திரற் சொர்னம் பரித்து கொடுத்து முதளைவாய் பிள்ளையும் அளைத்து கொடுத்து அருளிய தலத்துக்கு கட்டெமனை ஆகிய முந்திய தலமாகிய

கந்தமாபுரிப் பட்டணத்தில் வாளும் கந்தனாதீசுவறறுக்கு அடிமையாகிய வேடன் காணி வேட்டுவன் கொண்டு

பூலுவன் ஆண்டு வந்து னாட்டுக் கட்டத்தில் கைக்குள் அகப்பட்டபடியால் உள்க்கொண்டு இந்தப்பட்டணமு கையில் சேறத்துக்கொண்டு நடத்தி வரும்படிக்கி பால வெள்ளாழர் பாளையப்பட்டில் பயிசலி கோத்திரத்தில் சித்திரமேளி துவசம் பெத்த இம்முடிப் பட்டத்து சோளியாண்டா கவுண்டரவர்கள் குமாரன் வீர விக்கிறம சோளியாண்டாக் கவுண்டரவர்கள் இந்தக் கந்தமாபுரிப் பட்டணம் புக்களியூர் மங்கல முதலாகிய ராச்சியம் பரிபாலினம் செய்கின்ற னாளையில் சாலியவாகன சகாத்தம் 1226 ர்மேல் கலியுக சகாறதம் 4135க்கு மேல் செல்லாநிந்ற ரத்தாட்சி வருஷம் அற்ப்பிசை மீ. 15 தேதியில் துவாதெசியும் சுக்கிரவாரமும் பூரட்டாதி நட்செத்திரமும் தைதுல வாகறணமும் சோபண நாம யோகமும் பெத்த இந்த சுபதினத்தில் கிரய சாதனப் பட்டயம் எளுதிக்கொடுத்த விபரம். கிரய சாசனப் பட்டயமாவது மகாராசஸ்ரீய் துரைகள் என்பேரில் சிறப்பத்தியாக இடுக்கண்ணெக்குள் அகப்படுத்திக்கொண்டு னாள் மூன்றில் யிருவத்து னாலாயிரம் பொன் கைய்யி கொண்டு இந்தக் கந்தமாபுரிப் பட்டணம் விட்டு சேவயன்பதிக்கித் தாட்டிவிக்கச்சொல்லி அப்பணையானபடியினாலேயென்னுடைய இடுக்கணயை தவிர்த்தி யென் மானத்தனம் விளங்கத்தக்கதாக உள்க்கொண்டு நடத்திவறும்படிக்கி உங்களுக்கு உள்ப்புகுந்தபடியால் விபரம் ஆகையால் யெனக்குள்ள ராச்சியம் உங்கள் வசம் கொள்ள வேண்டிய படிக்கி வுத்தரவு செய்ய வேண்டிக் கொள்வதற்கு வினவும்படி உங்களுக்குயென்னுடைய அவசர நிமித்தமாக வாங்கின விபரம் யேதென்றால் யெளுமாத்துரு பொன்மேளித்

துவச்சனாகிய பனங்காடை கோத்திரத்து மூத்துக் காங்கய கவுண்டன் மகன் பொய்ங்கா கவுண்டப் பட்டக்காரன்,

மருதுறை ஆந்தை குலத்து பொன்மேளித் தலைவனாகிய கரிச்சிப் பட்டக்காரன் மகன் செல்லப்ப கவுண்டன் தென்கறை நாட்டுக் கொந்தனூரு காணியாளனாகிய பொன்மேளித் தலைவனாகிய ஆந்தை குலத்தில் முத்துக் கவுண்டர் மகன் சறவனைக் கவுண்டனுக்கும் நீங்கள் மூன்று பேருக்கு னான் உங்களுக்கு இந்த கத்தமாபுரிப் பட்டணம் இதுக்குள்ள தேவஸ்தானமும் குடுத்த விபரம் யெங்களுக்குள்ள ஆதினத்துக் குடையவராகிய தலத்துக் கவுண்டற்கள் பரஞ்சேர்வளி ஒதாளகுலத்துப்பொன்மேளித் தலவனாகிய அவினாசிக் கவுண்டரும், முத்தாரு மணிய குலத்தில் பொன்மேளித் தலைவனாகியபெரிய செல்லிய ணக்கவுண்டரும், வெள்ளோடு சாத்தந்தை கோத்திரத்தில் பொன்மேளித் தலைவனாகிய நஞ்சப்ப கவுண்டர் மகன் நல்லகாளியப்ப கவுண்டரும் என் ஆதீனத்துக்கு உடையவ ராகிய திருக்குத்தாலந்துறை திருக்கணக்குப் புள்ளை காசிப கோத்திரம் முதலாகிய யெப்பேறபட்ட னாலா கோத்திரத்திலுள்ள முருகநாத பிள்ளை மகன் முத்துவேல் பிள்ளையுங் கூடிச் சம்மதிச்சு இதுக்குச் சேந்த நாலு பாங்குக்குள்ள யெல்லைக்கட்டு விபரம் சேவையன்பதி நடுவச்சேரியெல்லைக்குந் தெற்கு, பெரிய பளனாபுரிக்கு தென்மேற்கு, திருப்பூறு பல்லடந்து யெல்லைக்கு வடகிழக்கு, தெக்கலூரு யெல்லைக்கு வடகிளக்கு கருவலூரு யெல்லைக்குங் கிளக்கு செம்பயநல்லூற் உள்பட இந்த நால்பாங்கும் எல்லைக்குள் உண்டாகிய தேவஷ்தானங்கள் முதலாகிய தற்மங்கள் வினாகட்டுவளிக்கு உத்தாரமாகக் கொடுக்க வேண்டிய திருவால பதினய்யாயிரம் பொன்னும் நீங்கள் மூன்று பங்காக பங்குக்கு அய்யாயிரம்

பொன்னு மேரையில் கொடுத்தபடியினாலே இந்தக் கந்தமாபுரிக்கிச் சேந்த தேவஷ்த்தானம் காசியிலும் வாசி தெட்சணை காசி அவனாசி கொங்கு வாறணவாசி சதுற்வேத மங்கலம் இந்த ரண்டு தேவஷ்த்தானமும் உள்பட அணை வாய்க்கால் கொளம் நஞ்சை புஞ்சை மாவடை மறவடை யெப்பேற்பட்டதிலும் தேவதாயம் பிறுமதாயம் பட்டவற்த் தினை

ஊழிக மானுவம் படித்திரந் திவரு யெப்பேற்பட்ட சம்பளக்காடு உத்தார சகிதமா ரேகசுத்த திருவாலசக்கிறம் 7655 பொன் போக நீக்கி நின்றது மதுரை அரமனை அஷ்த்தாந்திரத்துக்கு முடிப்புச் சென்று வருகுரது வருஷப் பிறிதிக்கு வருஷம் ஒன்றுக்கு 1655 பொன்னுக்கு னூத்தி அறவத்தஞ்சு பொன்னும் போக நின்ற திருவால சக்கிறம் 1500 பொன்னுக்கு கிரயம் 1500 பொன்னுக்கு நானாக சம்மதிச்சுக் கவுண்டர்கள் கணக்கப் புள்ளைகள் கை ஒப்பிதம் செயிது கிரய சாதனம் யெளுதிவிச்சுக் குடுத்த விபரம் யேதென்றால் யென்பேரில் ராசன் சொல் மொளி யாலும் வெகுள்ந்து கோபங் கொண்டது யேதுவித மென் றால். பெண்ணினாலும், பஞ்சகலியாணி பட்டத்துக் குதிரையாலும், யென் ஆயிதத்தினாலும், மங்கலத்து நிறவேறாமல். இருந்தபடியினாலும் இது முதலாகிய விபரத்தோடுங் கூடி உறுதி கொண்டு அவடத்திலிருந்து காரியப்பேரை அனுப்பிவிச்சு மட்டடக்கி வரச்சொல்லியும் பட்டணந் திரை கொண்டு மாத்திவச்சு யெல்லை தாட்டி விக்கச் சொல்லியும் இதுக்கு உறுதியாக 24000 பொன் குடுக்கச் சொல்லியும் மதுரையிலுள்ள காரியப்பேற் வீரப்ப முதலியாரு கொண்டப்பரெட்டியாரவர்களும் மாதுமுதலிப் பட்டக்காரனெயும் அனுப்பிவிச்சு மூன்று நாளையில் வகைப்பணம் 24000 பொன் னாள் மூன்றுக்குள்ளாக கட்டிக்

கொடுக்கத்தக்கதான படியினாலே என்னுடைய அதாரச தாரம் 9000 பொன்போக யின்னும் செல்ல வேண்டியது 15000 பொன்னுக்கு நீங்கள் மூவரும் கூடி உள்கொண்டுஇவ் வகைக்கு இடுக்கண்ணைத் தவிர்த்தி நடத்திக்கொள்ளத் தக்கவர்கள்ளென்று சொல்லிக்கொண்ட படியினாலே யென் மீதில் வந்த ஆபத்தையும் இடரையும் அகத்தி வைத்துச் சரிபங்காக நீங்கள் மூவரும் கூடிக் கொடுத்த திரிவால் சக்கரம் 15000 பொன். நான் ஒப்பித்தந்த கந்தமா புரிப் பட்டணம் இதுக்குச் சேந்த

தேவஸ்த்தானம் திரு அவினாசினாதரும் பெருங் கருணை நாயகியம்மனையும் அற்ச்சனை செய்யும் அறுவது தண்டிகைக்காரரில் ரோமர்ரிஷி கோத்திரத்து உடைய வராகிய காசிக்குப் போயிவந்த புக்களிநாத பண்டிதக் குறுக்களுக்கு இந்த ஆதீனத்தில் உச்சவம் பிறதிஷ்டை சாந்தி சம்போறட்ச்சனை யெப்பேற்பட்ட முப்பதுநாள் பங்குள்ளவரானபடியினாலே இவர்கள் முன்பாக கந்தமா புரிப் பட்டணம் முதலுள்ள பதிணெண் குலமும் இந்த திருமுருகன் பூண்டி ஆதீனத்துக்கு உடையவராகிய காசிப கோத்திரத்து மார்க்கண்டியக் குருக்களானபடியினாலே தன்னுடைய சிஷியனாகிய வீரவிக்கிரம சோளியாண்டாக் கவுண்டறுக்கு வந்த இடறும்கண்டு தம்முடைய மாப்பிளை யாகிய மார்க்கண்டிய கோத்திரத்துச் சுப்பிறமன்னிய பண்டிதருக்கு பட்டாபிசேகமும் செயிது இவர்கள் யென் பால் குறுக்களானபடியினாலே உம்முடைய ஸ்ரீ பெண் குப்பம்மாளுக்கு மஞ்சள் காணியாகக் கொண்டு இந்த ரண்டு தேவஷ்தான முப்பது நாள்தினமும் உச்சவம் பிறதிஷ்ட்டை சாந்தி சம்போறட்ச்சனை யெப்பேற்பட்ட வற்த்தனையும் தாராதத்தமாகக் கொடுத்து இந்த மார்க் கண்ட கோத்திரத்துச் சுப்பிறமன்னிய பண்டிதக் குறுக்களு டைய தாயாதியிணைப்பங்காளி முதலான பேர்களையும்

தருவிச்சு அந்தச் சென்னிமலைக் குமார சாமயன் சறவணையனை ரண்டுபேர் கையிலும் இந்த ஆதினத் துக்குக் காரியமில்லை என்று கையோலையும் வாங்கிக் கட்டிக் கொண்டோம். ஆனபடியினாலே இதுக்கு உறுதி உச்சவம் பிறிதிஷ்ட்டை முதலாநதுக்கும் காசிப கோத் திரத்து மாற்க்கண்டிய பண்டிதர் உடன் கொண்டு நடத்தி கொள்ளச் சொல்லி உறுதி கொண்டு புக்குளினாதபண்டிதக் குறுக்கள் முன்பாகத் தீர்த்துக் குடுத்து தாமும் சேவூருக்கு எளுந்தருளிப் போனார். ஆனபடியினாலே இந்த ஆதினத்துக்கு

இந்தச் சுப்பிரமன்னியக் குறுக்களானபடியினாலே உங்களுக்கு முருகநாதர் குலதெய்வமும் இந்தக் குறுக் களிடத்திலே தீட்சை திருமுடி செய்விச்சுக்கொண்டு உங்களுக்குச் சேந்த தலத்துக் கவுண்டு பரஞ்சேர்வளி ஓதாள குலத்தில் உள்ள கவுண்டர்களும், கொத்தனூறு ஆந்தை குலத்திலுள்ள கவுண்டர்களும், முத்தூருள்ள மணிய கோத்திரத்திலுள்ள கவுண்டர்களும், வெள்ளோடு சாத்தந்தை குலத்திலுள்ள கவுண்டர்களும், எளுமாத்தூரு பனங்காடை கோத்திரத்திலுள்ள கவுண்டர்களும், மருதுறை ஆந்தை குலத்திலுள்ள கவுண்டர்களும், கணக் கப்பிள்ளைய் முதலாகிய பேர்களும் இந்தச் சுப்பிர மன்னியப் பண்டிதரிடத்தில் தீஷ்ச்சை திருமுடி செய்து கொண்டு சந்திராதித்தர் உள்ளவரைக்கும் உடலுயிர் பொருள் மூன்றும் குருவுக்கு தாரைவார்த்துக் கொடுத்தபடி யினாலே இந்தக் கந்தமாபுரிப்பட்டணம் புக்குளியூரு மங்கலம் முதலூருள்ள பேறுடன் கொண்டபடியால்,

விபரம். சுப்பா சாஷ்த்திரியகள், வேங்கிட்டனாறாயண வாசுபேயற், யேசுசாகை ஆபதம்ப சூத்திரம் அகஷ்த்திய கோத்திரம் மணியம் கிஷ்ட்டணய்யன், சேனபோதநு

கோபாலய்யன், சுத்த சங்கீதம் ருத்திர வீணை நறசய்யன், சேலுவய்யன், திருமலைகிரிச் சத்திரியரில் கிஷ்ட்டண மறாசு, நரசிம்மராசு, இந்த ஆதீனத்துக்குப் பண்டாரம் முத்திரை சிவபிரகாச பிள்ளை தம்பிரான், வசியரில் கோபால செட்டி, முத்தஞ் செட்டி, நகரத்தாரில் முத்துக் குமார செட்டி, குளந்தவேல் செட்டி, தேசத்தாரில் சீதாராம செட்டி, பசவலிங்க செட்டி, இறுவத்துனாலு மனையாரில் அழகாத்திரி, சித்தி செட்டி, முசலிமான் சேக்கு அப்துல்க்கான், இபுராமு மீராகான், மம்முதுகான் கம்பளத்தாரில் வல்லக் கொண்டம நாயக்கன், நாகப்ப நாயக்கன், தேவாங்குச் செட்டி கோவிந்த செட்டி. வெள்ளான் செட்டி சிவக்கொழுந்து, குருநாத செட்டி செங்குந்தரில் முருகநாதநாட்டாண்மைக்காரன், அவினாசி நாட்டாண்மைக்காரன், கரணீகரில் காற்தி, செட்டி, திருவேங்கிடம், பாஞ்சாலரில் னோட்டம் சுப்பிரமணியன் கண்ணான் கோவிந்தன், திருவேங்கிடஞ் செட்டி, பசுபதிக் கொல்லன், பூமத்தச்சன், இந்தக் கந்தமாபுரி ஆதீனத்துப் புலவன் திருமுருகன், குளந்த வேலன், உப்பிலியப் பால நாயக்கன், கறுப்பனாயக்கன், வீரபுஷ்படிகள் சிவலிங்கன், கெங்காதரன், ஆண்டிகளில் செங்காளி, றாயாண்டி, நாகவாசத்தாரில் சிவக்கொளுந்து நட்டுவன், வேலுமணி நட்டுவன், மத்தள வீரப்பன், காவி, சங்கீத முத்துக் கறுப்டன், தானப்பன், நாகசுர நல்லயன், பொன்னயன், தவில் குப்பணன், நாராயணன், தாசிகளில் முத்து ரற்றின பாடகத்தி, வள்ளிமுத்து, மண்ணுடையாரில் திருமுருகன், அவினாசி, யேகாலிகளில் பழனிவேலன், நாவிதரில் யெள வுறுமன், புக்கொளி வாரியரில் செஞ்சனகன், விறுமன் கோசங்கிடு வம் சேன்னன் மல்லன், முத்துரங்கன்

இது முதலாகிய பேருங் கொண்டிருக்கும் பேர்களெல் வரும் சம்மதிச்சபடிக்கி இந்த ஆற்நாட்டுச் சேவயன்

பதிக்கடுத்த புக்குளிநகரங் கந்தமாபுரி சதிர்வேத மங்கலம் முதலுள்ளபேர் ஆதீனங்கொண்டு நடந்து வருகிறபடி யினாலே இந்த ஆதினத்துக்குள்ள கவுண்டர்கள் மேளித்துவசம் பெற்ற பனங்காடைகுலம் ஆந்தைகுலம் ரண்டு இந்த மூன்று பேருக்கும் இந்தத் தலத்திலுள்ள பிராமணர் வினாசம்மத பட்டக்காரருக்கு இந்தத் தலத்து ஆதீனத்துத் திருக்கணக்கப் பிள்ளைகள் முதலுள் ளெப்பேற்பட்ட நாலா கோத்திரத்து பொன்மேளித் துவசம் பெற்ற கவுண்டர் குடியானபேர் செட்டி வற்த் தனர்கள் பதினெண் வகுப்புஉள்ள பேரும் இந்த நாட்டி லுள்ள நாட்டுக் கவுண்டருக்குப் பட்டங்கட்டி வச்சு பட்டா பிஷேகமும் செய்வித்து பட்டத்து ஆனையின் பேரில் பட்டணப்பிறவேசம் வந்து செங்கோல் முத்திரையு கைய்க் கொண்டு யெல்லவற்கும் வெற்றிலை பாக்கு கட்டுச் செய்ய இந்த நாட்டுப் பட்டக்காரருக்கு இந்த மூன்று ஷ்த்தலத்தி லுள்ளபேர் நாட்டு வரியும் கலியாணம் ஒன்றுக்கு திருவாலம் அஞ்சுபணம் மேரைக்கி கொடுத்து குத்த சத்தம் யாவதுக் கும் உள்க்கொண்டு நடந்து கொள்கிறோமென்று

சம்மதப்படிக்கி கிறய சாதனம் யெளிதிக் குடுத்தோம். இந்த ஆதீனத்துக்குத் துரையாகிய வீர விக்கிறம சோளி யாண்டாரக் கவுண்டரவர்கள் இந்த அவினாசியில் உறுதி கொண்டு நடக்கும்படிக்கி உச்சவம் பிறதிஷ்ட்டையில் ராச தெரிசனம் உடுகுரை துப்பட்டி இம்முடியும் தேருக்கு முதல் முகூற்த்தத் தேங்காயும் தரச்சொலிச் சொன்னபடிக்கு சம்மதிச்சு உடன் இதில் யென் குலத்தில் யிணைபங்காளி த்ாயாதிகள் ஆஷ்பரியும் அதிகாரத்தில் கதித்து யெளுந் திருந்து இந்த ஆதீனத்துக்குள்ள கிறையம் வட்டி சயித மாக கொண்டு தருகுறோமென்றால் அந்த அந்தப் பயிசலி, கோத்திரத்திலுள்ள கவுண்டு பேற்கள் காசி க்ஷேத்திரத்தில்

கெங்கா நதியில்க் காராம்பசுவைக் கொன்ற தோஷத்தில் போகக் கடவாரென்று சொல்லிச் சொல்லி சம்மதிப் படிக்குச் சாட்சி முருகனாத சுவாமியாரவர்கள் முயங்கு பூண்முலை வல்லி அம்ம னாணையாக அவினாசி லிங்கரும் பெருங்கருணை நாயகி அம்மனும் வேம்படி மூர்த்தியும் ஆகாசறாயரும் சாட்சியாகக் கொண்டு இந்தக் கிரய சாசனம் நடக்கும்படிக்கு ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரணே ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது. இந்த மேரையில் இந்தத் தற்மம் வளுவாமல் நடத்திவந்த பேர்களுக்கு முருகனாத சுவாமி யாரும் முயங்கு பூண்முலை வல்லியம்மனும் கந்தநக ஷுஷ்த்து வாகாசமூர்த்தியும் சந்தான புத்திர பாக்கிய மும் கொடுத்து ரட்சிப்பார். இந்தச் சாசனம் சுப்பிறமணிய பண்டிதர் கையில் ரோமர்ரிஷி கோத்திரத்தில் புக்குளி னாதக் குருக்கள் முன்பாக முருகநாதருடையார் கோவில் சன்னிதானத்தில் வீர விக்கிறம சோளியாண்டக் கவுண்ட ரவர்கள் தம்முடைய குருக்களாகிய இந்தக் காசிப கோத்திரத்து மார்கண்ட பண்டிதர் முன்பாக தாராதத்த மாக கொடுத்த கிரயசாசனம் தாம்பிறப்பட்டயம். சாசனம் யெளுதினவன்

மண்டல புருஷன். திருக்கணக்கன் முருகநாத புள்ளை கைப்யெளுத்து. சேவயன்பதிக் கடுபன் சித்திர மேளித் தலவன் பயிசலி கோத்திரத்து வீர விக்கிறம சோளியாண் டாக் கவுண்டர் கைய்யொப்பிதம். அவினாசிக் கவுண்டன் ஒப்பிதம். பெரிய செல்லியண்ண கவுண்டன் ஒப்பிதம். நல்லகாளியப்ப கவுண்டன் ஒப்பிதம்.

சிவமயம் உ றாமஜெயம் உ

## முகுந்தநல்லூர்ப் பட்டயம்

ஈரோட்டில் ஆளிதமகாராயர் ஆட்சி செய்கின்ற காலத்தில் கொங்கு வேளாளரில் பூந்துறை நாடு எழுமாத்தூர்ப் பனங்காடை குலத்தில் ஆண்டாக் கவுண்டர் மகன் சோழியாண்டாக் கவுண்டர் அவர்கள் தென்குருப்பு நாட்டில் முகுந்த நல்லூரைக் கொங்கச் செட்டிகளில் காசி லிங்கம் செட்டியாரிடம் 1000 பூநாகரம் கொடுத்து முகுந்த நல்லூர், திருப்பூர், ஊத்தலூர், மண்ணறை போன்ற ஊர்களின் உரிமையில் சரி பங்கு பெற்றதை இந்த ஓலைப் பட்டயம் அறிவிக்கிறது. இக் கிராமங்களில் முதலில் எல்லா உரிமைகளையும், கோயிலில் முதல் விபூதி பெறல் முதலிய எல்லா உரிமைகளையும் பெற்ற விவரம் குறிக்கப் பெறுகிறது.

### மூலபாடம்

சுத்த சமஸ்த எஸ்த்த தோத்திரவா கலியுக சகாற்த்தம் 4347 மேற்செல்லாநின்ற விகாரி வருசம் மார்களி மீ 13தேதி புதன் வாரமும் பஞ்சமி திதியும் பூச நட்செத்திரமும் பெற்ற சுபதினத்தில் கொங்கு மண்டலத்துள் பூந்துறை நாடு ஈரோட்டில் ஆளித மகாறாயர் செங்கோல் செலுத்து நாளில் ஸ்ரீமன் மகாமண்டலீகர் கண்டறாகிய ஆளித மகாறாயர் சமூகத்தில் கொங்கு மண்டலத்துள் பூந்துறை நாடு எளுமாத்தூருக் காணியாளரில் பனங்காடர் குலத்தில் ஆண்டாக் கவுண்டருடைய குமாரன் சோளியாண்டாக் கவுண்டர் மேஷ்த்திக் கொங்கு மண்டலத்துள் தென் குறுப்பை வீரசோளபுர நாட்டில் முகந்தை நல்லூற்ச்

சீர்மைக்கி சுபாதீனமான காணியாளன் கொங்கச் செட்டிகளில் திருமிய கோத்திரத்தில் அவனாசி செட்டியாருடைய குமாரன் காசிலிங்க செட்டியார் கையில் முகந்தை நல்லூறச் சீர்மை கிறையமாக வாங்கையில் யிந்தமுகந்தை நல்லூறச் சீர்மைக்குச் செல்லும் சதிர்ச்சீர்மை விபரம் முகந்தை நல்லூர் திருப்பூரு ஊற்றலூரு மண்ணறை இந்த. அஞ்சு கிறாமத்துக்கு ஆண்ட சொன்னதாயம்

நஞ்சை புஞ்சை பட்டி தொட்டி மாவடை மரவடை புறகூலி பிறமுதல் அணை அச்சுக்கட்டு மக்க மகமை சுங்கஞ் . சோதினை எல்லை கொல்லை இதுவெல்லாஞ் செல்லுஞ் சதிர்ப்பூமியை எம்மரிகாதிக்குள்ள யிந்த அஞ்சு ஆதீனமும் சரிபங்காக விபூதி பிறசாதம் பச்சடம் பாக்கு வெற்றிலை இதுவெலா முதலானதுங் கொடுத்து அவனாசி லிங்கரும் ஆகாசறாயறு காசி விசுவநாதரும் விசாலாட்ஷி யம்மனும் அறிய சத்திய சாட்சியாகவும் பூந்துறை நாடு எளுமாத்தூருக் காணியாமன் பனங்காடர் குலத்தில் ஆண்டார்க் கவுண்டருடைய குமாரன் சோளியாண்டாக் கவுண்டருக்கு தாம்பர சாசனத்தில் தென் குறுப்பை வீரசோளபுர நாட்டுக்குக் காணியாமனான கொங்கச் செட்டிகள் திருமிய கோத்திரத்தில் அவனாசி செட்டியாருடைய குமாரன் காசிலிங்க செட்டியார் யிந்த அஞ்சு ஆதீனம் என்னுடைய சுபா ஆதினமா யிருக்குறதுக்காக பனங்காடர் குலத்துச் சோழியாண்டாக் கவுண்டருக்கு எழுதிக் கொடுத்து

1000 பூநாகரம்ப் பற்றிக் கொண்டு ஸ்ரீமன் கர்த்தராகிய ஆளித மகாறாயருக்கு விண்ணப்பஞ் செயிது கொண்டு முகந்தை நல்லூர்ச் சீர்மைக்கு முந்தினச் சரீபங்குக் காணியாமனென்று நாட்டி வய்த்துக் கொண்டோம், யிப்படி நடந்துவர வேண்டியதுக்கு யிந்தப்

பட்டையம் யெளுதிக் குடுத்த நன்மைக்கு பூந்துறை நாடு காடை குலத்தில் அவினாசி முத்தண கவுண்டர், வெள்ளோடு பயற குலத்தில் விசுவறாயக் கவுண்டர், சாத்தந்தை குலத்தில் சிஷ்ட்டணறாயக்கவுண்டர், காங்கய நாடு புறளந்த குலத்தில் (சிதம்பர) சறவணகாங்கய மன்றாடியார், செங்கண்ணர் குலத்தில் சிதம்பரப் பல்லவறாயக் கவுண்டர். பொங்கலூறக்க நாடு கொடுவாயில் றகுநாத கவுண்டர், கரியமாணிக்க கவுண்டர், ஆறுகாடு சேவூரில் பாலை வேழாழரில் மசக்காழிவேல் கவுண்டர், குறுப்பு நாடு ஈஞ்ச குல தம்பறாட்டியாக் கவுண்டர், குறுப்பு நாடு தென்முக வீரசோளபுர நாடுப் பட்டிபாலுக் குள்ள செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் சேதிறாயப் புலவன் கோவில் பூசை பண்ணும் விசுவநாதய்யன்

பத்திரகாளி கோவில் பூசை பண்ணும் கோவுணாண்டிகளில் முத்தாண்டி. கொயவரில் பெரியாக்குயவன் நாவிதரில் திருநாவிதன். தோட்டிகளில் பச்சான் முருகன் யிப்படி சுவத்திரியமாய் யெளிதிய பட்டையம் யிதுக்கு விகாதம் பண்ணாமல் நடப்பிவித்த பேர்கள் புத்திர பவுத்திரராய் வண்முஷ்ம் நட்சசேத்திரக்கிளை போலே விளங்கி வாள்வார்கள். யிதுக்கு விகாதம் பண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவரர்கள். யிதுக்கு விகாதஞ் செய்யாமல் நடப்பித்த பேர்கள் அனேகம் அனேகம் அசுவமேதியே பெறுவார்கள். யிந்தப் பட்டயம் யீரோட்டுக் கொங்கிலம்மன் கோவிலிலே யெளுதுனது. பட்டய மெளுதினவன் சறவணை ஆசாரி. அருளுமலையாண்டவர் லட்சிக்கவும். செங்கோட்டு அத்தனாரி ஈசுபரர் லட்சிக்கவும்.

சென்னிமலையாண்டவர் லட்சிக்கவும். றாமசெயம், சிவமயம், குருவே துணை உ.

## நல்லூர்க் கிரையப் பட்டயம்

கி.பி- 1575 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ஆம் தேதி ஆத்தூரில் இருக்கும் கொங்கு வேளாளரில் பனங்காடை குலத்துச் சோழியப்ப கவுண்டர் தன் கால்நடைகட்கு மேய்ச்சல் நிலம் தேடிப் பொன்குலுக்கி நாட்டைச் சேர்ந்த நல்லூருக்கு வந்தார்.

ஏற்கனவே கொங்கச்செட்டி பவளத்தான் என்பவர் அப்பகுதியை மதுரை நாயக்கருக்காக நிர்வாகம் செய்து வந்தார். அவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்த முடியவில்லை,

ஆயிரம் பொன்னாகரமும் பத்துப்பொதி நெய்யும் கொடுத்தால் நல்லூர்க் காணியாட்சியில் பாதி அளிப்பதாக மேய்ச்சலுக்கு வந்த ஆத்தூர் சோழியப்ப கவுண்டரிடம் கொங்கச்செட்டி பவளத்தாக் கவுண்டர் கூறுகிறார். அவ்வாறே ஆயிரம் பொன்னாகரமும் 10 பொதி நெய்யும் கொடுத்துக் கொங்குச் செட்டியிடமிருந்து நல்லூரின் உரிமையைப் பெறுகிறார் சோழியப்ப கவுண்டர். கொங்கச் செட்டியாருடன் நல்லூருக்குரிய காணியாளர் சிவப் பிராமணர் சுப்பய்யக் குருக்களும் ஓலையில் கையெழுத்திட்டுள்ளார்.

சோழியப்ப கவுண்டர் பெற்ற 2786 வள்ளக் காட்டுக்கு (11144 ஏக்கர்) விரிவான எல்லை கூறப்படுகிறது. உள்ளூர்க் கோயில்களிலும் ஆத்தூர்ச் சோழியப்ப கவுண்டருக்கு உரிமை கொடுக்கப்படுகிறது. ஆத்தூர்ப் பனங்காடை குலத்தினர் எழுமாத்தூரோடு தொடர்புடையவர்கள்.

### மூலபாடம்

கலியுக சகாத்தம் 4087 இதின் மேல் செல்லாநின்ற புவ வருசம் பங்குனி மாதம் 13-ந்தேதி சுக்கிர வாரம் உத்திர

நஷத்திரமும் பாலவாகரணமும் பெற்ற சுபதினத்தில் மதுரை வீரப்பனாயக்கர் செங்கோல் செலுத்திய நாளில் ஆத்தூரிலேயிருக்கும் பனங்காடை கோத்திரம் முத்து நஞ்சப்ப கவுண்டன் மகன் சோளியப்ப கவுண்டன் மேச்சல் பட்டிக்கு மாடோட்டிக்கொண்டு பொன்குலுக்கி நாட்டுக் குச் சேர்ந்த நல்லூருக் கிராமத்திற்கு வந்தபடியினாலே நல்லூரிலேயிருக்கும் கொங்கச் செட்டி பகளத்தானாகப் பட்டவன் நமக்கு அரமனை முடிப்புக்குப் பணம் செல்லா மலிருக்கிறபடியினாலே நீ ஆயிரம் பொன்னாகரமும் பத்துப் பொதி நெய்யும் கொடுத்தால் இந்தக் காணியாக்ஷி யிலே உனக்குப் பாதிப்பங்கு கொடுக்கிறேன் என்று சொன்னபடியாலே நான் சம்மதித்து ஆயிரம் பொன்னாகர மும் பத்துப்பொதி நெய்யும் கொடுத்து காலக்கிரயத்திற்குக் கொண்டேன்.

நான் முப்பாடு நீ பிற்பாடும் அண்ணனும் தம்பியும் ஆககூடி சுகத்திலிருப்போமாகவும். இதற்கு முன்னே சிவப்பிராமண ஜாதி சுப்பையய்க் குருக்களும் கொங்கச் செட்டி பகழத்தானும் நாங்கள் இரண்டு பேரும் ஆத்தூரு பனங்காடை கோத்திரம் சோளியப்ப கவுண்டனுக்கு எழுதிக் கொடுத்தோம். மேல்படிகாட்டுக்கு செக்குப்பந்தி எல்லைவிவரம் 2786 வள்ளக்காடு ஈசான்யம் வடகிழக்கில் மூலை குரத்திக் கல்லு வெள்ளைப்பாறை, தென்கிழக்கு மூலை ஆனைக்கல் கரடு, தென்மேற்கு மூலை காங்கயம் சமுத்திரத்துக் குளம் வடக்குக்கடை, வடமேற்கு மூலை மண்திட்டுப் பாரைக்காடு. இதற்குள்ளாக சிவாலயம் செல்வி நாயகம் சோளீஸ்வரர் கோட்டையில் பேச்சியம்ம னும் ஆத்தூருச் சோளியம்மனும் முக்கரைப் பிள்ளை யாரும் இத்தாதி தேவதாயம் பிரம்மதாயமும் நடத்தி வைத்துக்கொண்டு சுகத்திலேயிருக்கவும்,

இதற்குச் சாக்ஷி சோளீஸ்வரன் கோவில் ஸ்தானீகம் சுப்பையக் குருக்கள், பேச்சியம்மன் கோவில் பூசாரி செல்லாண்டிப் பண்டாரம், காங்கய மன்றாடியார், கொற்றைவேல் சர்க்கரை மன்றாடியார், பல்லவ ராயக் கவுண்டர், தென்கரைநாடு வேணாவுடையாக் கவுண்டர், பூந்தரசு நாடு வாரணவாசிக் கவுண்டர், பொன்குலுக்கி நாடு வேளராசி சூளாயன் கூட்டம் முத்துச்சின்னய கவுண்டர் ஒகாயனூர் சாத்தந்தை கூட்டம் சிலம்பர கவுண்டன், குண்டடம் ஓதாளங் கூட்டம் வடுகநாத கவுண்டன், பெருந்தொழுவு ஓதாளன் கூட்டம் சிலம்பர கவுண்டன், குருப்பநாடு அரசப்ப கவுண்டன், தோட்டி வணக்கியிலே நெட்டப்பழனி, கருப்பத்தோட்டி இந்த நாட்டாரும் கூடி எழுதிக் கொடுத்த தாம்பர சாசனப் பட்டயம். இதற்கு விகாதம் பண்ணாமல் நடத்தி வைத்த பேர்கள் புத்திர பௌத்திரமாய் பரிபாலனமாய் அனேக கோடி அசுவமேதயாகம் செய்த பலனைப் பெருவார்கள். இதற்கு விகாதம் பண்ணின பேர்கள் அஸ்வஹத்தி, கோஹத்தி, பிரம்மஹத்தி, சிசுஹத்தி, நரஹத்தி அஞ்சு பஞ்சமா பாதகத்தில் போகக் கடவார்கள். இந்தப் பட்டயம் எழுதினது குண்டடம் வடுகநாத சுவாமி சன்னதியில் எழுதினது. இந்தப் பட்டயம் எழுதினவன் குருவாசாரி. வடுகனாதஸ்வாமி துணை செய்யவும். சோளியம்மன ரக்ஷிக்கவும். கொங்கச் செட்டி பகழத்தான் கையொப்பம்-பனங்காடை குலக் காணியாக்ஷி. இதற்கு முன்னாலே புல்லூர் புன்னம் ஆத்தூர் எழுமாத்தூர் கொடுமணல் நல்லூரரே கொங்கச் செட்டியண்டே ஆயிரம் பொன்னாக்ரமும் பத்துப் பொதி நெய்யும் கொடுத்ததினால் காலக் கிரயம் கொண்டேன்.

★